பக்கங்கள்: 16 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 08 ஞாயிற்றுக்கிழமை 21.02.2021 கதிர் 108

**இனி இது ரகசியம் அல்ல!**

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர் குழுவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் குழுவுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் நிபுணர் குழுவில் இருந்தோருக்கு – ஏன் கூட்டமைப்பின் குழுவில்

பக்கம்02

# சுயநிர்ணயம் உள்ளகம் மறுக்கப்பட்டால் வெளிப்புறம் மடியில் வீழும்

## அரசமைப்பு உருவாக்க நிபுணர்கள் குழுவிடம் அறுதியிட்டு எத்துரைத்தார் சம்பந்தன் எம்.பி.



கொழும்பு, பெப்ரவரி 21

“இலங்கைத் தமிழர்கள் தனியான ஒரு மக்கள் கூட்டத்தினர். சர்வதேச சட்டங்களின் பிரகாரம் ஐக்கிய இலங்கைக்குள் உள்ளக சுயநிர்ணய உரித்தை கொண்டவர்கள் அவர்கள். அது மறுக்கப்படுமானால் பிரிந்து செல்லும் வெளிப்புற சுயநிர்ணய உரிமை அவர்கள் மடியில் தானாக வீழும்.”

– இவ்வாறு அரசமைப்பு உருவாக்க நிபுணர்கள் குழுவிடம் அறுதியிட்டு எடுத்துரைத்திருக்கின்றார் சம்பந்தன் எம்.பி.

2

## தமிழரசு மத்திய செயற்குழு 27 வவுனியாவில் கூடுகிறது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப். 22

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி வவுனியாவில் இடம்பெறவுள்ளதாக கட்சியின் செயற்குழு உறுப்பினர்களிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் அரசுக் கட்சியில் பல விடயங்களில் மாற்றங்கள் ஏற்பட்டமையோடு, பொதுத் தேர்தலின் பின்னரான கருத்து

2

## 79 ஆயிரத்தைத் தாண்டியது தொற்றாளர் எண்ணிக்கை!

### நேற்றும் 528 பேர் அடையாளம்

இலங்கையில் நேற்றும் 528 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 79 ஆயிரத்து 465 ஆக அதிகரித்துள்ளது.

2

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு சர்வதேசத்திடம் நீதி கோரி உறவுகள் கிளிநொச்சியில் தீச்சட்டிப் போராட்டம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சர்வதேசத்திடம் நீதி கோரி கிளிநொச்சியில் மாபெரும் தீச்சட்டிப் போராட்டப் பேரணியை நேற்று முன்னெடுத்தனர்.

வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல்

2




## ஐ.நா. பிரேரணை வரைவு வெளியானது; சர்வதேச நீதிமன்றப் பரிந்துரை இல்லை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடரில் கொண்டுவரப்படவுள்ள இலங்கை தொடர்பான பிரேரணையின் வரைவு வெளியாகியுள்ள நிலையில், அதில் சர்வதேச

2

## 600 கிராம் எடையில் பிறந்த குறைமாதக் குழந்தை தேறியது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.21

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வெறும் 600 கிராம் எடையில் பிறந்த ஒரு குழந்தை மருத்துவர்களின் பெரும் முயற்சியினால் பூரண நலம்பெற்றுள்ளதாக மருத்துவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பருத்தித்துறையை சேர்ந்த 6 மாதக் கர்ப்பவதித் தாய் ஒருவர் திடீர் பிரசவ வலி காரணமாக மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உடனடியாக நோயாளர் காவுவண்டி மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு அவர் உடனடியாக குழந்தை பிரசவித்தார். சாதாரணகர்ப்ப

2

## கஜேந்திரகுமார், கஜேந்திரன் எம்.பிக்களிடமும் பேரணியில் பங்கேற்றமை பற்றி வாக்குமூலம்!

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் அக்கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன்

2



## மேலும் இருவர் சாவு; கொரோனா காவு 435

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் மேலும் இரு சாவுகள் பதிவாகியுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன நேற்றிரவு

2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்த மாவை சேனாதிராசா, சுமந்திரன், சித்தார்த்தன் போன்றோருக்கும் கூட – பெரும் ஆச்சரியம் காத்திருந்தது.

தமது 89ஆவது வயதில் பெரிதும் தளர்ந்து போயிருந்தார் என்று கருதப்பட்ட இரா.சம்பந்தன், தமிழர் தரப்பின் நிலைப்பாட்டை ஒரு நீண்ட – பிசிறே இல்லாத – ஒரு முழக்கமாக பொழிந்து தள்ளியமையைக் கண்டு அயர்ந்து போனார்கள் அங்கிருந்த பிரமுகர்கள். ஐந்து ஜனாதிபதி சட்டத்தரணிகள், இரண்டு பேராசிரியர்கள் உட்பட கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் பிரமித்துத்தான் போனார்கள்.

உறுதியுடன் சம்பந்தன், ஆணித்தரமாக முன்வைத்த கருத்துகளையும் அவரின் ஆங்கில சொல்லாடலையும் பார்த்துக் கேட்டு அதிசயித்துப் போன சிங்கள ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவர் *"இப்படி ஒரு தலைவரை நீங்கள் பெற்றிருக்கின்றமைக்கு உண்மையில் பெருமைப்படலாம்"*– என்று பின்னர் சுமந்திரனிடம் கூறினாராம்.

கூட்டம் முடிந்ததும், நிபுணர் குழுவுக்குத் தலைமை வகித்த ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா சம்பந்தனிடம் ஓடோடி வந்து அவர் கைகளைப் பற்றியபடி *"நல்ல காலம் அரசியலுக்கு நேரத்துடன் நீங்கள் வந்து விட்டமையால் நீதிமன்ற வழக்குகளைத் தள்ளி வைத்துவிட்டீர்கள். இல்லையேல் எங்களில் பலரின் பிழைப்பு மண்ணாகியிருக்கும்."* – என்றாராம்.

இந்த வயோதிப மூப்பிலும் தமது பழைய கம்பீரத்துடனும் உறுதியுடனும் நறுக்குத் தெறித்தால் சம்பந்தன் முழங்கியமை கண்டு எதிர்த் தரப்பு மட்டுமல்லர், மாவை சேனாதிராசா, சித்தார்த்தன், சுமந்திரன் போன்றோரே வாயடைத்துப் போயினராம். (என் பேச்சை நம்பாதீர்கள். இந்த மூவரில் உங்களுக்கு யாரையேனும் தெரியுமானால் இந்த விடயத்தை ஒரு தடவை அவருடன் அல்லது அவர்களுடன் cross check பண்ணிப் பாருங்கள்)

கூட்டம் முடிந்ததும் நம்மவர் மூவரும் கூட சம்பந்தன் ஐயாவுக்கு அவரின் அற்புதமான – ஆணித்தரமான – அர்த்தங்கள் நிறைந்த – அந்த உரைக்கும் விளக்கத்துக்கும் தமது பாராட்டையும், வாழ்த்தையும், நன்றியையும் வாயாற மெச்சித் தெரிவிப்பதற்குத் தவறவில்லை.

கூட்டம் முடிந்த பின்னர் வீடு திரும்பிய சித்தார்த்தன் மீண்டும் தொலைபேசி அழைப்பு எடுத்து சுமந்திரனுடன் சம்பந்தன் ஐயாவின் பேச்சுக் குறித்து சிலாகித்தார்.

*"பார்த்தீர்களா ஐயாவின் ஸ்மாட்டை...? வழக்கமாக எங்கள் கூட்டங்களில் ஐயா கண்ணை மூடி, தலையைக் கவிழ்ந்து, அடங்கியிருக்கின்றமையை அவரது வயோதிபம் என்று எண்ணிக் கொண்டோம். அவ்வளவும் பொய். அவர் சரியானஷார்ப்... என்ன வீறாப்போடு இன்று முழங்கினார் பார்த்தீர்களா...?"* – என்று கேட்டார் சித்தார்த்தன்.

அவர் அதைக் குறிப்பிடும் போது எனக்கு இன்னொரு தகவல் நினைவுக்கு வந்தது.

இது நடந்து சில ஆண்டுகள் இருக்கும். நாடாளுமன்றத்திலும் பிற இடங்களிலும் தமிழர் அரசியல் தொடர்பான விடயங்களை விவரிக்கும் போது நாள், கிழமை, திகதி தப்பாமல் மிகச் சரியாகவும், துல்லியமாகவும் குறிப்பிட்டு பழைய விடயங்களைச் சுட்டிப் பேசுவார் சம்பந்தன். (இந்தத் தனித்துவத் திறமை தமிழர் தரப்பில் மற்றொரு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமிர்தலிங்கத்துக்கும் இருந்தது.)

சம்பந்தனின் இந்தத் திறமையை கண்டு வியந்து போன மற்றொரு ஜனாதிபதி சட்டத்தரணியான கனகேஸ்வரன் அதை நேரடியாகவே சம்பந்தனிடம் கேட்டாராம்.

*"ஸாம்... அது எப்படி இந்தத் திகதிகள் மற்றும் சம்பவ ஒழுங்குகளை எல்லாம் இப்படிக் கனகச்சிதமாக நினைவில் வைத்திருக்கின்றீர்கள்...?"* – இது கனகேஸ்வரனின் கேள்வி.

*"ஈஸ்... (அப்படித்தான் கனகேஸ்வரனை சம்பந்தன் விளிப்பார்)... நான் சட்டத்தரணி தொழிலுக்கு 1958 இல் வந்தேன். கையில் சுமார் எழுநூற்றியைம்பதுக்கும் அதிகமான 'கேஸ்கள்' (வழக்குகள்) இருந்த போதுதான் 1977 இல் ஒரு நாளில் அத்தனை வழக்குகளையும் கைவிட்டு அரசியலுக்கு வரும் முடிவை எடுத்தேன். அன்று தொடக்கம் இன்று வரை நான் கையாள்வது ஒரே ஒரு வழக்குத்தான். அது தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினை என்ற 'கேஸ்' மட்டுமே. ஒரு 'கேஸ்' என்பதால் அதன் முழு விவரமும் எனக்கு அத்துப்படியாக இருக்க வேண்டுமல்லவா? அதுதான் ...!"* – என்று பதிலளித்தார் சம்பந்தன்.

சம்பந்தன் ஒரு பெரும் சரித்திரம்தான்.

அரசியலுக்காக தமது முழு நேர சட்டத்தரணி தொழிலை அவர் நேரத்துடனேயே கைவிட்டமையால் என்னவோ, அவருக்கு ஜனாதிபதி சட்டத்தரணி பதவியோ, அந்தஸ்தோ கிடைக்கவில்லை. ஆனாலும் தமிழர் தேசத்தின் முதுபெரும் சட்டத்தரணி அவர் மட்டுமே...!

– மின்னல் –

## கஜேந்திரகுமார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆகியோரிடம் கிளிநொச்சிப் பொலிஸார் நேற்று வாக்குமூலம் பதிவு செய்தனர்.

நீதிமன்றத் தடையை மீறி பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிப் போராட்டத்தில் இருவரும் பங்கேற்றனர் எனக் கூறியே இந்த வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இராசமாணிக்கம் சாணக்கியன், தவராசா கலையரசன், செல்வம் அடைக்கல நாதன், எஸ்.வினோநோகராதலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் களான பா.அரியநேத்திரன், சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகியோரிடம் நீதிமன்றத் தடையை மீறி பேரணியில் பங்கேற்றமை தொடர்பில் பொலிஸார் வாக்குமூலங்களைப் பதிவு செய்திருந்தனர்.

## சுயநிர்ணயம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர் குழு அதன் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா தலைமையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை நேற்று சந்தித்தது.

நேற்றுக் காலை 10.30 மணி முதல் 12.30 மணி வரை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் உள்ள குழு அறை ஒன்றில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தரப்பில் இரா.சம்பந்தன் எம்.பி. தலைமையில், எம்.ஏ.சுமந்திரன் எம்.பி., த.சித்தார்த்தன் எம்.பி., மாவை சேனாதிராசா ஆகியோர் பங்குபற்றினர். செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. இந்தக் கூட்டத்தில் பங்குபற்றவில்லை.

அரசமைப்பு உருவாக்க நிபுணர் குழுவில் ஜனாதிபதி சட்டத்தரணி நவீன் மாரப்பன, ஜனாதிபதி சட்டத்தரணி மனோகர டி சில்வா, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.சர்வேஸ்வரன், ஜனாதிபதி சட்டத்தரணி சமந்த ரத்வத்தை, ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜெயவர்த்தன, பேராசிரியர் வசந்த செனிவிரத்ன ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.


"தமிழ் மக்கள் ஒரு தனியான மக்கள் கூட்டம். தாம் வாழும் நாட்டில் உள்ளக சுயநிர்ணய உரித்தை அவர்கள் கொண்டவர்கள். சர்வதேச சட்டங்களின்படி அந்த உரித்து அவர்களுக்கு உரியது. அதனை உள்வாங்கி, அதனடிப்படையில் ஓர் அரசமைப்பு ஒழுங்கை ஏற்படுத்திக் கொடுப்பது ஆட்சித் தரப்பின் கடப்பாடு. பொறுப்பு.

"உள்ளக சுயநிர்ணய உரிமை தமிழ் மக்களுக்கு மறுக்கப்படுமானால் பிரிந்து செல்வதற்கு வழிவகுக்கும் வெளிப்புற சுயநிர்ணய உரிமை தமிழர்கள் மடியில் தானாக வந்து வீழும்" – என்று உறுதிபட இந்தச் சந்திப்பில் கருத்து வெளியிட்டார் இரா.சம்பந்தன்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள யோசனைத் திட்டம் தொடர்பாக நிபுணர் குழுவினர் எழுப்பிய கேள்விகளுக்கு இரா.சம்பந்தனும், எம்.ஏ.சுமந்திரனும் பதிலளித்தனர். (உ)

# கொலையாளிகளைப் பாதுகாத்து பாதிக்கப்பட்டோரை கைவிடும் இலங்கை குறித்த ஐ.நாவின் புதிய வரைவு!

## அங்கத்துவ நாடுகளின் தலைவர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும் – விக்கி



இலங்கை தொடர்பான ஜெனிவா தூதரகங்களுக்குள் விநியோகிக்கப்பட்ட 'சீரோ' வரைவானது குறைபாடு உள்ளதாகவும் ஏமாற்றம் தருவதாகவும் இருக்கின்றது. அதுவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் காரியாலயத்தினதும் ஆணையாளர் பச்சலெட் அவர்களினதும் சிபாரிசுகளுக்குக் குறைவாக குறித்த வரைவு காணப்படுவது மிகவும் மன வேதனை அளிக்கின்றது.

– இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வீ. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த வரைவு தயாரிப்பதற்குப் பொறுப்பாக இருந்த பிரிட்டன், கனடா, ஜேர்மனி, மொன்டிநீக்குறோ, மசிடோனியா வடக்கு ஆகிய உள்ளகக் குழு அங்கத்துவ நாடுகளின் தலைவர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும். இவ்வாறான வரைவுகள் ஐக்கிய நாடுகளின் வருங் காலத்திற்கு நன்மை பயக்காது என்பதை நாம் உணர வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள கேள்வி – பதிலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

கேள்வி: – ஜெனிவா தூதுக் ☞15

## ஐ.நா. பிரேரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீதிமன்றம் குறித்த பரிந்துரை இடம்பெறவில்லை.

இலங்கை தொடர்பான தீர்மானத்தின் உத்தேச வரைவு சர்வதேச நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் உள்ளடக்கங்கள் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த வரைவில் தமிழர் தரப்பில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட சர்வதேச நீதிமன்றம் தொடர்பான விடயங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

## 79 ஆயிரத்தைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து இதுவரை 73 ஆயிரத்து 456 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 5 ஆயிரத்து 574 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## மேலும் இருவர் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அறிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்கனவே 433 கொரோனா சாவுகள் பதிவானதாக அறிவிக்கப்பட்ட நிலையில்,நேற்றிரவு அறிவிக்கப்பட்டுள்ள இரு மரணங்களுடன், நாட்டில் இதுவரை 435 கொரோனா உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அறிவிக்கப்பட்டவர்களில் ஒருவர் நேற்றும், மற்றைய நபர் நேற்று முன்தினமும் சாவடைந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குருவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த, 66 வயதான ஆண் ஒருவர், மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் இருந்து கொரோனாத் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டு, கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, அங்கு உயிரிழந்துள்ளார். அவரது மரணம் நேற்றுமுன்தினம் நிகழ்ந்துள்ளது. அவரது சாவுக்கான காரணம், சுவாசத் தொகுதி செயலிழப்பு, குருதி விமடைவு, கொரோனாத் தொற்றுடன் கூடிய நிமோனியா மற்றும் புற்றுநோய் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, திஹாரி பிரதேசத்தைச் சேர்ந்த, 78 வயதான ஆண் ஒருவர், கம்பஹா மாவட்ட வைத்தியசாலையில் இருந்து கொரோனாத் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டு, ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, அங்கு உயிரிழந்துள்ளார். அவரது மரணம் நேற்று நிகழ்ந்துள்ளது. அவரது சாவுக்கான காரணம், கொரோனாத் தொற்றுடன் கூடிய நிமோனியா என அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழரசு மத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேறுபாடுகள் தொடர்பான சர்ச்சைகள் எழுந்தபோது மத்திய செயல்குழுவைக் கூட்டுமாறு கோரிக்கைகளும் முன் வைக்கப்பட்டிருந்தன.

இந்தக் கூட்டத்தில் செயலாளர் பதவி விலகியமை உள்ளிட்ட பல விடயங்கள் எடுத்துக்கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 600 கிராம் எடையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காலம் 35 வாரமாகும். எனினும் முன்கூட்டியே 24 ஆவது வாரத்தில் பிறந்த இந்தக் குழந்தையின் நிறை 600 கிராமாக மட்டுமே காணப்பட்டது. சிசு பராமரிப்பு வைத்திய நிபுணர் டீபால் நவரட்ண தலைமையிலான மருத்துவக் குழுவினரின் 4 மாத முயற்சியில் – அதாவது 97 நாள்கள் பராமரிப்பில் – குழந்தை பூரண நலமாகத் தேறி தற்போது தாயாருடன் வீடு சென்றமை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வரலாற்றில் முதலாவது சம்பவமாக பதிவிடப்படுகின்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நீண்டகாலம் சிசு பராமரிப்பு வைத்திய நிபுணர் பதவி வெற்றிடமாக இருந்தது. தற்போது அந்த வெற்றிடம் நிரப்பப்பட்ட நிலையில் குறித்த சிகிச்சை வழங்கப்படுகின்றது. அதேநேரம் தற்போது மற்றுமோர் தாயார் 25 வார கர்ப்பகாலத்தில் பிரசவித்த குழந்தையும் சுகதேகியாக வைத்தியசாலையில் பராமரிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

## சர்வதேசத்திடம் நீதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்து நேற்றுடன் 4 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் இந்தத் தீச்சட்டிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தத் தீச்சட்டி பேரணியானது கிளிநொச்சி பிள்ளையார் கோயில் முன்றலில் ஆரம்பமாகிய நிலையில், கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றலில் நிறைவடைந்தது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடர் நடைபெறவுள்ள நிலையில், தமக்கான நீதியை சர்வதேசம் பெற்றுத்தர முன்வர வேண்டும் என வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், எங்கே எங்கே உறவுகள் எங்கே? சர்வதேசமே பதில் சொல், வேண்டும் வேண்டும் உறவுகள் வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோங்களை எழுப்பினர்.

இந்தப் போராட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கிராம மட்ட அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள், வர்த்தக சங்கங்கள், போக்குவரத்துக் கழகங்கள், அரசியல் பேதமின்றி அனைத்து அரசியல்வாதிகளும் கலந்துகொண்டு தங்களுக்கான நீதி கிடைக்க வலுச் சேர்க்குமாறும் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அழைப்பு விடுத்திருந்தனர்.

இதற்கமைய பல்வேறு தரப்பினரின் பங்குபற்றுதலுடன் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

100% இலவசமாக கல்விகற்கும் வாய்ப்பு
BIT

University of Colombo
Study Bachelor of Information Technology
Colombo University Certificates
இக்கற்கை நெறியை கற்பதுடன் தகவல் தொழில்நுட்பதுறையில் அனுபவத்தை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு
கல்வித் தகைமை
- GCE A/L 3 பாடங்களிலும் சித்தி
- GCE O/L 6 பாடங்களில் சித்தி (கணிதம் C | ஆங்கிலம் C உட்பட.)
அனுமதி 24.02.2021 வரை மட்டுமே....
HigherStudy.lk
தொடர்புகளுக்கு +94 77 408 3570
No. 5/1, Pillaiyaar Road, Thirunelvely, Jaffna

# சர்வதேச நாடுகளுடன் பகைக்காமல் அரசு செயற்பட வேண்டும் – திஸ்ஸ



இனங்களுக்கிடையில் தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப அரசாங்கம் உரிய பொறிமுறைகளை வகுக்க வேண்டும். புதிய அரசமைப்பில் நல்லிணக்கம் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்பதை உத்தேச புதிய அரசமைப்பு நிபுணர் குழுவிடம் தெரிவித்துள்ளதாக லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரன தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை விவகாரத்தில் அரசாங்கம் சர்வதேச நாடுகளை பகைத்துக் கொள்ளாமல் நாட்டின் இறையாண்மைக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்பட வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் பேராசிரியர் திஸ்ஸ விதாரன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

நாட்டில் அரசாங்கங்கள் காலத்துக்குக் காலம் எவ்வாறு மாற்றமடைகிறதோ, அவ்வாறே இனங்களுக்கிடையிலான நல்லிணக்கமும் காலத்துக்கு காலம் மாற்றமடைகிறது. நாடு அனைத்து துறைகளிலும் முன்னேற்றமடைய வேண்டுமாயின் தேசிய நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் அனைத்தும் தேசிய நல்லிணக்கம் தொடர்பில் உரிய கவனம் செலுத்தியுள்ளன.

அத்தோடு, தேசிய நல்லிணக்கம் தொடர்பாக தற்போது மாறுப்பட்ட பல கருத்துக்களும், விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன. ஒரு தரப்பினரது வெறுக்கத்தக்க பேச்சுக்களும், நடத்தைகளும் இனங்களுக்கிடையில் தற்போது முரண்பாட்டை தோற்றுவித்து நல்லிணக்கத்தை சவாலுக்குட்படுத்தியுள்ளது என்பதை தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

தேசிய நல்லிணக்கத்தை உறுதியாக செயற்படுத்த அரசாங்கம் புதிய அரசமைப்பின் ஊடாக சிறந்த பொறிமுறையை வகுக்க வேண்டும் என்பதைத் தெளிவாக குறிப்பிட்டுள்ளோம். தேசிய நல்லிணக்கத்தை தவிர்த்து ஒருபோதும் முன்னேற முடியாது. சர்வதேசமும் இன நல்லிணக்கத்தையே அங்கீகரிக்கும். – என்றார்.

# சமல் ராஜபக்ஷ தலைமையில் 6 அமைச்சர்கள் கொண்ட குழு!

கொழும்பு,பெப்.21

ஜனாதிபதியால் ஆறு அமைச்சர்கள் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் தேசிய பாதுகாப்புத் தொடர்பான துறையின் மேற்பார்வை குழுவின் அறிக்கைகளை ஆராய்வதற்கும் பரிந்துரைகளை வழங்குவதற்குமே இவ்வாறு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் சமல் ராஜபக்ஷ தலைமையிலேயே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் உயர்கல்வியைத் தொடர அநேகமான மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு
Courses available:
Diploma | Bachelor Degree | Master Degree
Business, Hospitality, Accounting, Engineering and Nursing
கிடைக்கப்படும் நன்மைகள்
- படித்துக்கொண்டே ஒரு வாரத்தில் 20 மணிநேர வேலைக்கான அனுமதி உண்டு
- பட்ட படிப்பை நிறைவு பெற்று 18 மாத வேலை செய்வதற்கான அனுமதி உண்டு
தொடர்புக்கு:-
Eng. Mario Lucas (MARN: 9802588 )
Australian Migration Consultants
41, George R De Silva Mw, Colombo 13
0112437285, Email: sl.austvisa@gmail.com
HOTLINE: 0766228891

## தவக்காலச் சிந்தனை



அன்ரனி பீற்றர் அ
ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்

# தங்கம் புடமிடப்படும்போதே தரத்தில் உயர்கின்றது

சங்கு சுட்டாலும் வெண்மையில் குறைவதில்லை. தங்கம் புடமிடப்படும் போதே தரம் நிர்ணயிக்கப்படுகின்றது. பரீட்சைகளில் வெல்பவர்களே அடுத்த நிலைக்குக் கடந்து செல்கின்றார். இயேசுவும் சோதனைக் காரனால் (பசாசினால்) சோதனைக்கு உட்படுத் தப்பட்டார். ஆனால், அவனால் இயேசுவை மேற்கொள்ள முடியவில்லை. பசாசின் சோதனைகளையெல்லாம் இயேசு இறைவார்த்தையை ஆதாரம் காட்டி வெற்றி கொண்டார். எமக்கும் சோதனைகளை வெல்ல முடியுடம் என்பதை இறை மகன் இயேசு சோதனைகள் ஏற்படும் பொழுது இறைவனை, இறைவார்த்தையை ஆதாரமாகக் கொண்டால் நாமும் சோதிக்கப்பட்டதன் மூலம் எமக்கு உணர்த்துகின்றார். இயேசுவும் நாற்பது நாள்கள் உண்ணா நோன்பு இருந்தார். நோன்பை நாம் மேற்கொள்ளும் பொழுதே நாம் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றோம் நாற்பது நாள்கள் எமக்கு நோன்பு காலம் திரு அவையால் தரப்படுத்தப்பட்டிருக்கின்றது. இயேசுவின் வழியில் தடம்பதித்தால் நாம் சோதனைகளை வெற்றி கொள்ளலாம்.

குடும்ப வாழ்வாக இருந்தாலும் துறவு நிலை வாழ்வாக இருந்தாலும் உலகத்தின் வாழ்வு எமக்கு சவாலாகவே இருக்கும். சவால்களுக்கு முகம் கொடுக்காமல் அநீதியான செயல்களுக்கு நாம் இணங்கிச் செயற்படுவோமாக இருந்தால் நன்மைகளைத் தடுக்கின்றவர்களாகவே நாம் மாறி விடுகின்றோம். மாயக் கவர்ச்சிகள் எம்மை மயக்கிவிடுகின்றன. சுகபோக வாழ்வும் சொத்துக்களைச் சேர்க்கும் நடைமுறைகளும் ஏழைகளுக்கு துரோகம் இழைக்கும் செயல்களாகும். பொது நன்மைகளை சுயநலத்தின் கண்கள் மறைத்து விடுகின்றன. சும்மா இருந்து உழைப்பதே முதலாளிகளின் நோக்காக இருக்கின்றது. அநீதிகளுக்கு குரல் கொடுத்தாலும் அவை பணக்காரர்களால் கண்டு கொள்ளப்படுவதில்லை. ஏழைகளின் குரல்கள் அதிகாரத்தினால் அடக்கப்படுகின்றன. நிலையில்லா உலக வாழ்விலலே நிலை யானது என்று நினைப்பதாலே மக்கள் சிறுமைப்படுகின்றார்கள்.

நோன்புக் காலமாகிய தவக்காலத்திலே நாம் எம்மை மாற்றிக் கொள்வதுடன், உலகின் அநீதியான போக்குகளும் அராஜகங்களும் அகன்று நீதியினால், அன்பினால் கட்டப்பட்ட வாழ்க்கை முறைகள் மக்களால் பின்பற்றப்பட, நாம் ஆட்சியாளர்களுக்காக வும் அவர்களின் செயல்களிலே மாற்றங்கள் ஏற்படவும் இறை வேண்டல் செய்ய வேண்டும். தவக்காலத்தில் முன்னெடுக்கப்படும் வேண்டுதல்கள் விண்ணப்பங்கள் அருள் அளிப்பனவாக அமையும். சுயநலம் களைந்து தூய உள்ளத்தோடு அனைவருக்காகவும் செபித்துக் கொள்ளுவோம்.

இலங்கையில் கல்வி கற்ற பொறியியலாளர்களுக்கு ஆஸ்திரேலியா விசா !!!
Australian Skilled - Recognised Graduate Visa for Junior Engineers (Graduated within 2 years)
18 Months to work and gain experience in Australia.
தகைமைகள்:
* வயது எல்லை 31
* பொறியியலாளர் பட்ட படிப்பு
BSc.Engg, B.Tech (Engg) from University of Moratuwa, University of Peradeniya, University of Jaffna, University of Ruhuna, Open University of Sri Lanka
* ஆங்கிலம் - IELTS average 6
தொடர்புக்கு:-
Eng. Mario Lucas (MARN: 9802588 )
Australian Migration Consultants
41, George R De Silva Mw, Colombo 13
0112437285, Email: sl.austvisa@gmail.com
HOTLINE: 0766228891

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஆக்கிரமிப்பு தேசம் இது!

முப்படையினரையும் பயன்படுத்தி இந்த இலங்கைத் தீவை ஒரு நாடாக ஆட்சியாளர்கள் வைத்திருக்கின்றார்களே தவிர, மனதளவில் இரண்டு தேசங்களாகவே இலங்கை இருக்கின்றது.

– இவ்வாறு தன்னிடம் வாக்குமூலம் பெறவந்த பொலிஸாரிடம் கூறியிருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்.

வெளிப்படையாகப் பார்த்தால் இது வெறும் அரசியல் ஸ்டண்ட பேச்சுபோல – கருத்து மாதிரி – தென்பட்டாலும் கூட, இந்த இலங்கைத் தீவில் இனவாத அரசியல் பிரச்சினையின் மூலச்சாறே இந்தக் கூற்றுக்குள் முழுமையாக அடக்கப்பட்டிருக்கின்றது என்பதுதான் உண்மை.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்தும் 'இரு தேசம்; ஒரு நாடு' என்ற கோட்பாடுதான் உண்மை நிலைமை. அதை ஆக்கிரமிப்பு இராணுவம் மூலம் நீங்கள் மூடிமறைத்து வைத்திருக்கின்றீர்கள் என்பதையே வேறு சொல்லாடல்கள் மூலம் நாகரிகமாக எடுத்துரைத்திருக்கின்றார் சிறிதரன் எம்.பி. அவ்வளவே.

இந்த இலங்கைத் தீவில், அதன் தற்போதைய சட்டங்களினால் வனையப் பெறாத இரண்டு தேசங்கள் – தமிழர் தேசமும் சிங்களவர் தேசமும் – நிலைகொண்டிருக்கின்றன என்பதுதான் யதார்த்தப் புறவுண்மை.

தமிழர் தேசத்தை தனது ஆதிக்கத்தினால் கபளீகரம் செய்து, ஆக்கிரமித்து, தனது சிங்கள தேசத்துடன் இணைத்து, இலங்கை நாடு என்று பிரகடனப்படுத்தி, ஆக்கிரமிப்பு ஆட்சி நடத்துகின்றது தென்னிலங்கைச் சிங்களம். இந்த இலங்கைத்தீவில் எண்ணிக்கை அடிப்படையில் தாங்கள் பெரும்பான்மையினர் என்ற சாதக நிலைமையைப் பயன்படுத்தி, இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையை ஜனநாயக நீதியாக அர்த்தம் பண்ணி சமாளிக்கின்றது அது. எனினும் அதன் சிங்கள, பௌத்த பேரினவாத வெறியே இந்த நாட்டின் ஆட்சி முறைத் தத்துவமாகக் கட்டவிழ்கின்றது.

இலங்கைத் தீவில் எண்ணிக்கையில் சிறுபான்மையினர் என்பதால், அட்சர கணித எண்ணிக்கையில் மட்டும் நீதியைத் தீர்மானிக்கும் ஜனநாயகக் கேலிக் கூத்து முறைமையின் கீழ் தாங்கள் அடக்கி, ஒடுக்கி, ஆக்கிரமிக்கப்பட்டு, இந்தத் தீவில் மூன்றாம் தரப் பிரஜைகளாக – அடிமைகளாக – புறமொதுக்கப்பட்டுள்ளோம் என்ற வெறுப்புணர்வில் இருக்கின்றார்கள் தமிழ் மக்கள்.

தங்களின் தமிழர் தேசம், பெரும்பான்மை இனவாதத்தின் பேரினவாத வெறியினால் அடக்கி ஒடுக்கப்பட்டு, ஆக்கிரமிக்கப்பட்டு, ஆளப்படுகின்றது என்ற மனவேதனை இத்தீவின் தமிழ் மக்களுக்கு.

இன்னும் கொஞ்சம் விரிவாகவும், விளக்கமாகவும் கூறுவதானால், இலங்கைத் தமிழ் மக்களை அவர்களின் விருப்பமோ, இசைவோ, அனுமதியோ இன்றித் தனது படை ஆதிக்கத்தின் மூலம் ஆக்கிரமித்து ஆட்சி செய்கின்றது தென்னிலங்கை அரசு.

இதைத்தான் நாசூக்கான தனது சொல்லாடல் மூலம் பொலிஸ் வாக்கு மூலத்தில் வெளிப்படுத்தியிருக்கின்றார் சிறிதரன் எம்.பி.

இந்த இலங்கைத் தீவு – தமிழர் தேசம், சிங்களவர் தேசம் என்று – இரண்டைக் கொண்டிருந்தபோதும் –

அதை முதலில் கைப்பற்றி ஆண்ட அந்நியரான போர்த்துக்கீசரும், பின்னர் ஒல்லாந்தரும், தொடர்ந்து ஆங்கிலேயரும் இந்தத் தீவில் நிலை கொண்டிருந்த தமிழர் தேசத்தையும், சிங்களத் தேசத்தை வெவ்வேறாக – வெவ்வேறு ஆளுநர்கள் மூலம் – நிர்வகித்தனர்.

1799 இல் ஒல்லாந்தரிடமிருந்து இலங்கைத் தீவின் ஆட்சிக் கட்டுப்பாட்டை கைப்பற்றிக் கொண்ட ஆங்கிலக்குடியேற்ற இராச்சியம், 1833இல் இரண்டு தேசங்களையும் ஒன்றாக்கி, ஒற்றையாட்சி அமைப்பைத் திணித்தனர். இலங்கைத் தீவில் இரு தேசங்களுக்கு – இரு தேசியங்களுக்கு – இடையிலான நிரந்தரப் பிணக்குக்கும் இதன் மூலம் கால்கோளிட்டனர் ஆங்கிலேயர்கள்.

அவர்கள் இந்த நாட்டின் மீதான தமது ஆட்சியதிகாரத்தை விலக்கி, இந்த நாட்டிலிருந்து வெளியேறிய போது அந்த ஒற்றையாட்சி முறைமையின் கீழ் இலங்கைத் தீவில் தமிழர் தேசத்தின் இறைமையையும் சேர்த்து, எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான பௌத்த சிங்களப் பேரினவாதிகளிடமே ஒப்படைத்துச் சென்றனர்.

அதற்குப் பின்னர் இரண்டு அரசமைப்புக்களை தென்னிலங்கை சிங்கள தேசம் முழு இலங்கைத் தீவின் மீதும் விதித்தது.

1972 இல் கொண்டு வரப்பட்ட குடியரசு யாப்பாகட்டும், அதன் பின்னர் 1978இல் கொண்டு வரப்பட்ட நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைக்கான யாப்பாகட்டும், இரண்டுமே தமிழர் தேசத்தின் இணக்கமின்றி, அதன் மீதும் சேர்த்துத் தென்னிலங்கைச் சிங்கள தேசத்தினால் திணிக்கப்பட்டவைதான்.

இப்படி இரண்டு தனித்தனி தேசங்கள், மக்கள் எண்ணிக்கை என்ற ஜனநாயகக் கேலிக் கூத்துக் கோட்பாட்டின் கீழும், படைபல ஆட்சி முறை நடவடிக்கைகள் மூலமும் ஒன்றிணைக்கப்பட்டு, ஒன்றை ஒன்று அடக்கியாள்வதாகவே இலங்கைத் தீவின் சரிதம் தொடர்ந்து கட்டவிழ்கின்றது.

அதையே, சிறிதரன் எம்.பி. யதார்த்த பூர்வமான வசனங்களில் எடுத்துரைத்திருக்கின்றார்.

# புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டிருந்தாலும் தனி ஈழ இலக்கு சர்வதேச அளவில் வியாபகம்

### சரத் வீரசேகரவின் கண்டுபிடிப்பு இது!



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு நாட்டில் தோற்கடிக்கப்பட்டிருந்தாலும் அவர்களின் தனி ஈழ இலக்கு சர்வதேச அளவில் வியாபித்துள்ளது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

தனி ஈழக் கொள்கையையுடைய அரசியல்வாதிகள் இன்றும் தமிழ் இளைஞர்கள் மத்தியில் பிரிவினைவாதத்தை தூண்டிவிட முயற்சிக்கிறார்கள் என்றும் இதன் காரணமாகவே தேசிய பாதுகாப்பு விடயத்தில் அதிக அக்கறை கொண்டுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்த அவர் –

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் தேசிய பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டது. குறுகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய புலனாய்வு பிரிவின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டன.

இவ்வாறான செயற்பாட்டை அடிப்படைவாதிகள் சாதகமாகப் பயன்படுத்தி ஏப்ரல் 21 தினத்தில் குண்டுத்தாக்குதலை முன்னெடுத்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை நடவடிக்கை தற்போது பகுதியளவில் நிறைவுப் பெற்றுள்ளது.

யுத்த காலத்தில் தேசிய பாதுகாப்பு எந்தளவிற்கு வினைத்திறனாக செயற்பட்டதோ அந்தளவிற்கு தற்போது புலனாய்வு பிரிவு மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பிற்கு புலனாய்வு பிரிவின் பங்களிப்பு பிரதானமானதாகும். வடக்கில் உள்ள பெரும்பாலான பகுதிகளில் கண்ணி வெடி அகற்றல் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஒரு சில பகுதிகளில் பெருமளவிலான ஆயுதங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவை புலனாய்வு பிரிவினரது தகவல்களுக்கு அமைய கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பு நாட்டில் தோற்கடிக்கப்பட்டிருந்தாலும் புலிகளின் தனி ஈழ இலக்கை இன்றும் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களும் அரசியல்வாதிகளும் சர்வதேச மட்டத்தில் முன்னெடுத்து செல்கிறார்கள்.

இதற்கு அவர்கள் வாழும் நாடுகளில் அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே புலிகள் அமைப்பு அழிக்கப்பட்டிருந்தாலும் அவர்களின் இலக்கு சர்வதேச அளவில் வியாபித்துள்ளது.

தனி ஈழ கொள்கையைக் கொண்ட தமிழ் அரசியல்வாதிகள் ஒற்றையாட்சி முறைமைக்கு முரணான கருத்துக்களைக் குறிப்பிட்டு இளைஞர்கள் மத்தியில் பிரிவினைவாதத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள்.

இதன் காரணமாகவே தேசிய பாதுகாப்பு விவகாரத்தில் அதிக கவனம் செலுத்தியுள்ளோம். அழிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பினை மீளுருவாக்குவதற்கு செயற்பட்டால் அது தண்டனைக்குரிய குற்றமாகும். – என்றார்.

# தமிழர்களைத் தவிர்த்து இந்தியாவுக்கு பாதுகாப்பாக எவரும் இருக்கமுடியாது!

### சிறிதரன் எம்.பி. எடுத்துரைப்பு

தமிழர்களைத் தவிர இந்தியாவிற்குப் பாதுகாப்பாக எவராலும் இருக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பாதுகாப்பு நண்பனாக இந்தியாவின் எப்பொழுதுமான பாதுகாவலனாக வடக்கு கிழக்கின் தமிழர்களே இருப்பார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில்:-

சீனாவின் செயற்பாடுகள் இந்தியாவிற்கு ஆபத்தானவை. இந்தியா இனியும் தமிழர்களை எதிரியாகப் பார்க்காது அவர்களின் நலன்களுக்கு அப்பால் இந்தியாவின் நலன்களையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

இணைந்த வடக்கு, கிழக்கிலே தமிழர்களுக்கான இழந்துபோன உரிமைகள், சுயாட்சியை வழங்குவதன் மூலம் இந்தியாவிற்கான ஒரு பாதுகாப்பு நண்பனாக இந்தியாவின் எப்பொழுதுமான பாதுகாவலனாக வடக்கு கிழக்கின் தமிழர்களே இருப்பார்கள். தமிழர்களைத் தவிர இந்தியாவிற்கு பாதுகாப்பாக எவராலும் இருக்க முடியாது.

எனவே, இந்தியா தனது வெளியுறவுக் கொள்கையிலிருந்து மாறி, சீன அரசாங்கத்தின் ஊடாகவோ அல்லது வெளிநாட்டு அரசாங்கத்தின் ஊடாகவோ இலங்கை மேற்கொள்கின்ற நடவடிக்கைகளில் தமிழர்களுடைய இருப்புக்களையும் பாதுகாத்துக்கொண்டு முயற்சித்தால், அது இந்தியாவிற்கு பெரிய பலத்தைத் தரும்.

எமது ஆதரவு இந்தியாவுக்கு இருக்கும். சீனாவோடு எங்களுக்கு இருக்க முடியாது. அதனால்தான் நாங்கள் அடிவாங்குகின்ற காலத்திலும் சரி, நாங்கள் தோற்றுப் போயுள்ள காலத்திலும் சரி இப்பொழுது நாங்கள் ஏதுமற்ற ஏதிலிகளாக இருக்கின்ற காலங்களில்கூட இந்தியாவின் பக்கம் நிற்கின்றோம்.

இந்தியாவிற்கு எப்பொழுதும் நாங்கள் ஆதரவாக இருக்கின்றோம். நாங்கள் இந்தியாவுடன் சேர்ந்து இயங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம் என்ற செய்தியை நாங்கள் மீண்டும் மீண்டும் குறிப்பிடுகின்றோம். அதற்காக, நாங்கள் என்ன விலையையும் கொடுக்கத் தயாராக இருக்கின்றோம். – என்று குறிப்பிட்டார்.

# வடக்கு சீன மின் உற்பத்தி திட்டம் தொடர்பில் அமைச்சரவை ஆய்வு!

இலங்கையின் வட பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ள மின் உற்பத்தி திட்டங்கள் தொடர்பாக அமைச்சரவை மேலதிக ஆய்வுகளை முன்னெடுத்துள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த ஆங்கில ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில், யாழ்ப்பாணத்தின் நயினாதீவு, அனலைதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய மூன்று தீவுகளிலும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன், புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் மூலமான மின் உற்பத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

குறித்த மின் உற்பத்தி திட்டத்துக்காக சீனா தெரிவு செய்யப்பட்டமைக்கு, இந்தியா எதிர்ப்பு வெளியிட்டதாக கூறப்படும் நிலையில், அமைச்சரவை மேலதிக ஆய்வுகளை முன்னெடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அதாவது, சர்வதேச ரீதியான ஏல விற்பனை நடைமுறைகளுக்குப் பின்னரே சீன நிறுவனமொன்றுக்கு குறித்த புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி திட்டம் வழங்கப்பட்டதாக இலங்கை மின்சார சபையின் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

மேற்படி மின் உற்பத்திக்கு டீசல் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையால் செலவினம் மிக அதிகமாகக் காணப்படுகின்றது.

ஆகவேதான் மின் உற்பத்தி திட்டங்கள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய, இலங்கையின் வட. பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ள இந்த மின் உற்பத்தித் திட்டங்கள் தொடர்பில் அமைச்சரவை மேலதிக ஆய்வுகளை முன்னெடுத்துள்ளது. இந்தத் திட்டத்தை இரத்து செய்வதற்கான தீர்மானம் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. – என அவர் குறிப்பிட்டுள்ளதாக ஆங்கில ஊடக செய்திகள் தெரிவிக்கின்றன.

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கான பயிற்சி வினாத்தாள்

**34 | T | II**


விஞ்ஞானம் II
Science II
**அமைப்புக் கட்டுரை**

**R.திலக்ஷன்**
BSc. (Natural Science) 077 946 9244
**கிளி/ கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்**

**3 மணித்தியாலம்**
Three Hour

## பகுதி II (A)

01.A. வாழ்க்கை கோலத்தில் ஏற்படும் மாற்றம் காரணமாக ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான வரைபாகும்.




(Source WHO Report 2020)


I) மேற்தரப்பட்ட நோய்களின் பொதுவான பெயர் யாது?
II) இந் நோய்கள் ஏற்படுவதற்கான பொதுவான காரணங்கள் 2 குறிப்பிடுக?
III) இலங்கையின் எப்பிரதேசத்தில் சிறுநீரக நோயாளிகள் பதிவாகின்றனர்?
IV) குறித்த அச் சூழலில் அந் நோய் நிலைமை ஏற்பட பிரதான காரணம் யாது?
V) மேற்தரப்பட்ட நோய்களில் சிறுவர்களை வெகுவாகப் பாதிக்கும் நோயையும் அதற்கான காரணத்தையும் குறிப்பிடுக?

B. சூழலில் சமநிலையைப்பேணி எதிர்கால சந்ததியினருக்கு பயன்படுத்த கூடிய வகையில் சூழல் வளங்களை அறிவுபூர்வ மாக பயன்படுத்த வேண்டும்.
I) அவ்வாறான சூழல் வளங்கள் இரண்டு குறிப்பிடுக?
II) இயற்கை வளங்களை பயன்படுத்தும் போது சூழலுக்கு பாதிக்காதவாறு சிறப்பான மட்டத்தில் பேணுவதற்காக திட்டம் எவ்வாறு அழைக்கப்படும்?
III) பேண்தகு அபிவிருத்தியை உண்டாக்க உம்மால்முன்னெடுக்கக் கூடிய இரண்டு திட்டங்களை முன்வைக்குக.
IV) சேதனப் பசளை எவ்வாறு தயாரிக்கப்படுகின்றது?
V) மேற்கூறப்பட்ட சேதனப் பசளை பயன்பாட்டால் சூழலுக்கு கிடைக்கும் நன்மை ஒன்றை குறிப்பிடுக?

02.A. தாவரங்களிலும் விலங்குகளிலும் பல்வேறு தொழில்கள் ஆற்றுவதற்கு சிறத்தலடைந்த கலங்களின் கூட்டம் இழையம் ஆகும்.
I)பின்வரும் தொழிற்பாடுகளுக்கு அவசியமான இழைய வகையை பெயரிடுக.

| தொழிற்பாடு | இழைய வகை |
|---|---|
| 1.உணவு உற்பத்தி | ................................................. |
| 2. விலங்குகளில் கணத்தாக்கம் கடத்தல் | ................................................. |
| 3.தாவரங்களின் துணை வளர்ச்சி | ................................................. |

II) காழ் இழையம் தாவரங்களில் காணப்படும் சிக்கலான நிலையிழையமாகும். அதில் காணப்படும் இறந்த கலவகை ஒன்றை குறிப்பிடுக?
III) சுரப்பியாக தொழிற்படும் விலங்கு இழைய வகை யாது?
IV) தொடுப் பிழையத்தின் சிறப்பியல்பு ஒன்று தருக?




B. உணவு கால்வாய் தொகுதியின் ஒரு பகுதி அருகே தரப்பட்டுள்ளது.
I) சமிபாட்டு தொழிற்பாட்டில் உதவும் X இன் மூலம் சுரக்கப்படும் பதார்த்தம் யாது?
II) Z இல் நடைபெறும் புரத சமிபாடு தொடர்பான இடைவெளியை நிரப்புக.

புரதம் $\xrightarrow{\text{பெப்சின்}}$ .........................

III) Y இனால் சுரக்கப்படும் நொதியம், ஓமோன் முறையே தருக?


C. கலமொன்றில் காணப்படும் கலப்புன்னங்கங்கள் சில கீழே தரப்பட்டுள்ளது.
**(கரு, பச்சையவுருமணி, கொல்கியுடல், இழைமணி)**
I) கருவில் உள்ள நியூக்கிளிக்கமில வகை ஒன்றை குறிப்பிடுக.
II) இழைமணியில் நடைபெறும் அனுசேப தொழிற்பாடு யாது?
III) புடகம் போன்ற கட்டமைப்பு உடைய கலப்புன்னங்கம் எது?



**ஒருங்கிணைப்பு:- கே.எஸ்.ரகு**

IV) மேலே தரப்பட்ட கலப்புன்னங்கங்கள் யாவற்றையும் கொண்ட கலம் எவ்வாறு அழைக்கப்படும்?


03.A)
I) கடல் நீர் பல்வேறு உப்புக்கள் கரைந்துள்ள கலவையாகும். கடல் நீரில் உள்ள உப்புக்கள் இரண்டை குறிப்படுக.
II)ஆவிப்பறப்பற்ற திண்ம அல்லது திரவக் கூறுகள் அடங்கியுள்ள கலவை ஒன்றின் கூறுகள் ஒன்றில் இருந்து ஒன்று வேறுபடுத்தி இனங்காண பயன்படும் உபகரண அமைப்பு தரப்பட்டுள்ளது.




a)இங்கு பயன்படுத்தப்படும் வேறாக்கல் முறை எவ்வாறு அழைக்கப்படும்?
b)இங்கு அசையா அவத்தை என கருதப்படும் பகுதி எது?
c)இங்கு பயன்படுத்தப்படும் கரைப்பான் ஒன்று தருக?
d)அக் கரைப்பான் கொண்டுள்ள சிறப்பியல்பு ஒன்று தருக?


III) மேற்படி அமைப்பை தக்கை அடைப்பானால் மூடுவதற்கு காரணம் என்ன?
IV) மேலே தரப்பட்ட முறையை பயன்படுத்தும் சந்தர்ப்பம் ஒன்று தரு?

B. செப்பு மின்வாயை பயன்படுத்தி $CuSo_4$ கரைசலை மின்பகுப்புச் செய்யும்அமைப்பு தரப்பட்டுள்ளது.





I) மூன்று நிமிடங்களின் பின் அனோட்டு, கதோட்டு மின்வாய்கள் திணிவு தொடர்பான உமது அவதானம் யாது?
a) அனோட்டு மின்வாயின் திணிவு
b) கதோட்டு மின்வாயின் திணிவு
II) அனோட்டில் நடைபெறும் அரை அயன் தாக்க சமன்பாட்டை தருக?
III) கதோட்டில் நடைபெறும் அரை அயன் தாக்க சமன்பாட்டை தருக?
IV) மின்பகுப்பின் போது கவனம் செலுத்த வேண்டிய காரணி ஒன்று தருக?

04.A.சைக்கிள் டைனமோ ஒன்றின் வரிப்படம் தரப்பட்டுள்ளது.




I) இங்கு x,y என குறிப்பிடப்பட்டுள்ள பகுதியை பெயரிடுக.
II) மின்னுற்பத்தி தொடர்பாக இங்கு பயன்படுத்தும் அடிப்படை கொள்கையை எழுதுக.
III)இங்கு பாயும் மின்னோட்ட திசையை கண்டறிய பயன்படும் விதியை எழுதுக?
IV) P,Q இல் பெறப்படும் மின்னோட்டம் நேரத்துடன் மாறும் வரைபை வரைக?
V)டைனமோ தவிர்ந்த வேறு ஒரு சூழல் நேய மின்னுற்பத்தி முறை ஒன்று குறிப்பிடுக.

B.ஓமின் விதியை வாய்ப்பு பார்க்க பயன்படுத்தப்பட்ட மின் சுற்றின் குறியீட்டு வரிப்படம் தரப்பட்டுள்ளது.




I) x,y ற்கு பொருத்தமான மின்சாதனங்களை பெயரிடுக.
x -
y -
II) வாசிப்பை பெறும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் ஒன்றை குறிப்பிடுக.
III) z உபகரணத்தின் பெயரை குறிப்பிட்டு அது பயன்படுத்துவதற்கான காரணத்தை தருக?
IV) இப்பரிசோதனை மூலம் பெறப்படும் முடிவு யாது?

## பகுதி II (B)

* 5,6,7,8,9 ஆகிய வினாக்களுக்குள் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

05. A உடலின் குருதி குளுக்கோசு மட்டம் சீராக்குவதைக் காட்டும் குறிப்பு கீழே தரப்பட்டுள்ளது.


அதிகரிக்கும்போது → x ஓமோன் சுரத்தல்
சாதாரண குளுக்கோசு மட்டும்
குறையும் போது → y ஓமோன் சுரத்தல்

I) a) குறிப்பு A இல் குறிப்பிடப்பட்டுள்ள x,y ஆகிய ஓமோன்களை குறிப்படுக?
b) x,y ஓமோன்களை சுரக்கும் சுரப்பியை குறிப்பிடுக.

c) ஓமோன் X சுரப்பது குறைவடைவதால் ஏற்படும் நோய் நிலைமை யாது?
d) குருதியில் குளுக்கோசு மட்டம் X,Y ஆகிய ஓமோன்களில் தொழில்களை தனித்தனியே தருக?

II) பின்வரும் சந்தர்ப்பங்களில் ADH ஓமோனில் அளவு கூடுமோ அல்லது குறையுமா என குறிப்பிடுக.
a) குருதியில் நீரின் சதவீதம் அதிகரிக்கும் போது
b) குருதியில் நீரின் சதவீதம் குறையும் போது
III) உடலின் நீரினளவு குறையும் போது சிறுநீரகத்தின் எச் செயற்பாடு மூலம் அது சீராக்கப்படுகின்றது?
IV) மனித உடலின் வெப்பநிலை கட்டுப்பாட்டு மையம் எங்கு காணப்படுகிறது?

B. மெண்டலின் தலைமுறையுரிமை தொடர்பான பரிசோதனைக்குரிய வரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது.




I) இப் பரிசோதனைக்கு மெண்டல் பயன்படுத்திய தாவரத்தின் பெயரை விஞ்ஞான பெயரீட்டு விதி முறைகள் அடிப்படையில் எழுதுக?
II) இச் சோதனைக்கு பயன்படுத்திய தாவரத்தின் விசேட இயல்புகள் இரண்டு தருக?
III)இச் செயன்முறையின் போது ஒடுக்கற்பிரிவு நடைபெறும் சந்தர்ப்பம் எது?
IV) மேற்பெறப்பட்ட $F_1$ பரம்பரையை ஒற்றை கலப்பு பிறப்பாக்கம் செய்யும் போது தேன்றும் பரம்பரையின் பிறப்புரிமை அமைப்பை புனற் சதுரத்தை பயன்படுத்தி கண்டறிக.
V) $F_2$ பரம்பரையின் தோற்றவமைப்பு விகிதத்தை தருக?
VII) விவசாயத்தில், மருத்துவத்தில் பரம்பரையலகு தொழில்நுட்பம் பயன்படும் சந்தர்ப்பம் ஒவ்வொன்று குறிப்பிடுக.
விவசாயம் –
மருத்துவம் –

06.A. அமில மூல தாக்கத்தின் வெப்ப மாற்றத்தை கண்டறிய திட்டமிடப்பட்ட பரிசோதனை பதார்த்தங்களின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.
- $1 moldm^{-3}$ $H_2SO_4$ கரைசல் 100ml
- $1 moldm^{-3}$ $Mg(OH)_2$ கரைசல் 100ml
- வெப்பமானி
- பொலிஸ்ரைரினால் காவலிடப்பட்ட பாத்திரம்
- கண்ணாடிக் கோல்

I) இப் பரிசோதனையில் போது வெப்பசக்தி தொகுதியில் இருந்து உருவாக்கப்படுமா?
II) இங்கு நடைபெறும் தாக்கத்தில் சமப்படுத்திய சமன்பாட்டை தருக?
III) தரப்பட்ட பட்டியலின் படி அமிலம், மூலம் இரண்டினதும் மொத்த திணிவு யாது?
IV) வெப்பமானியில் ஆரம்ப வெப்பநிலை $30^oC$ ஆகவும் இறுதி வெப்பநிலை $38^oC$ ஆகவும் காணப்பட்டுமெனின் இத் தாக்கம் தொடர்பான வெப்ப மாற்றத்தை கணிக்க.
V) இங்கு கண்ணாடிக் கோல் பயன்படுத்த காரணம் யாது?
VI) இங்கு பொலி ஸ்ரைரின் பாத்திரத்திற்கு பதிலாக செப்பு பாத்திரத்தை பயன்படுத்த முடியுமா? உமது விடைக்கான காரணத்தை குறிப்பிடுக?

B. ஆவர்த்தன அட்டவணையின் பகுதி ஒன்று தரப்பட்டுள்ளது. அவற்றின் அடிப்படையில் கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக (இங்கு தரப்பட்ட குறியீடுகள் உண்மையானவை அல்ல)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| A | | | | | | | B |
| | | | D | F | | G | |
| | | | E | | | H | |
| C | | | | | | | |


I) மேலே தரப்பட்டுள்ளவற்றுள் ஓரணு வாயு எது?
II) மூலகம் C யின் இலத்திரன் நிலையமைப்பை தருக?
III) சமதானிகள் கொண்ட இரண்டு மூலகங்களையும் தெரிவு செய்க.
IV) B,D,F,G,C ஆகிய மூலகங்களை முதலாம் அயனாக்க சக்தி அடிப்படையின் இறங்கு வரிசைப்படுத்துக.
V) C,H ஆகிய மூலகங்களின் ஒக்சைட்டின் சூத்திரங்களை தருக?

C. மின்னெதிர் தன்மை வேறுபாடு காரணமாக நீர் மூலக் கூறுகளுக்கு இடையே கவர்ச்சி உண்டாகின்றது.
I) நீர் அறை வெப்ப நிலையில் திரவமாக காணப்பட காரணமான கட்டமைப்பை வரைக?
II) நீர் மூலக் கூறின் 5mol இல் காணப்படும் மூலக் கூறுகளின் எண்ணிக்கை யாது?

07. A.
I) திணிவு, நிறை என்பவற்றை வேறுபடுத்துக?
II) புவியீர்ப்பு ஆர்முடுகல் என்றால் என்ன?
III) ஓய்வில் இருந்து கீழே விழுந்த கல் ஒன்று நிலத்தை அடைய 6S எடுத்தது.
a) இவ் இயக்கத்திற்கான வேக – நேர வரைபை வரைக.
b)கல் எவ்வளவு உயரத்தில் இருந்து விழுந்தது எனக் காண்க.



B. $20ms^{-1}$ எனும் வேகத்துடன் நிலைக்குத்தாக மேல் நோக்கி எறியப்பட்ட கல் மீண்டும் ஆரம்ப புள்ளியை அடைய எவ்வளவு நேரம் செலவாகும் என்பதை காண்க.
வளிமண்டல அமுக்கத்தை அளவிட தயாரிக்கப்பட்ட உபகரண ஒழுங்கமைப்பு தரப்பட்டுள்ளது.





I) அருகிலுள்ள உபகரணத்தை பெயரிடுக.
II) இங்கு X ஆக பயன்படுத்தும் திரவம் யாது?
III) கடல்மட்டத்தில் திரவ நிரலின் உயரம் h யாது?
IV) இங்கு திரவ அமுத்தம் பற்றிய எவ் இயல்பின் அடிப்படையில் அமுக்கம் துணியப்படுகின்றது.

C.75kg திணிவுடைய எண்ணெய் பீப்பாயை 2m உயரமான வாகனத்தில் ஏற்றுவதற்கு 2 நிமிடம் எடுத்தது.
I) இங்கு பயன்படுத்த கூடிய எளிய பொறி யாது?
II) பொறியின் வலு யாது?
III) வாகனத்தில் ஏற்றப்பட்ட பின் பீப்பாயின் அழுத்த சக்தி யாது?
IV) இங்கு பயன்படுத்திய எளிய பொறி மூலம் வேலையை இலகுவாக்கும் பிறிதொரு உதாரணத்தை குறிப்பிடுக.


8.A.இயற்கை பதிய முறை இனப் பெருக்கத்தால் தாவரத்தின் நிலக்கீழ் அல்லது காற்றுக்குரிய பகுதிகளால் புதிய தாவரங்கள் உவாக்கப்படுகின்றன.
I) பின்வரும் தாவரங்களின் பதிய முறை இனப்பெருக்க பகுதியை குறிப்பிடுக.
a) கறிவேப்பிலை b)மஞ்சள் c)நெல் d)பெகோணியம் (ஆணை செவிப்பூண்டு)
II) செயற்கை பதிய முறை இனப்பெருக்க வகைகள் இரண்டு தருக?
III) பதிய முறை இனப்பெருக்கத்தின் பிரதிகூலமான விளைவு ஒன்று தருக?

B.ஆண் இனப்பெருக்க தொகுதியுடன் தொடர்புடைய





I) A,B ஆகிய பகுதிகள் பெயரிடுக.
II) மனித உடலில் விதைகள் ஏன் உடலிற்கு வெளிப்புறமாக தள்ளப்பட்டு விதைப்பையினுள் வைக்கப்பட்டுள்ளது.
III) ஆண் இனப்பெருக்க தொகுதியின் தொழில்கள் இரண்டு குறிப்பிடுக?

C. உராய்வு தங்கியுள்ள காரணிகளை கண்டறிய மாணவர் குழுவுக்கு மரக்குற்றி வெவ்வேறு தரமுடைய மணற் கடதாசிகள், கப்பி எண்ணெய் பூசப்பட்ட நூல், சில பொருத்தமான நிறுத்தற்படிகள் என்பன வழங்கப்பட்டுள்ளது.





I) உராய்வு தங்கியுள்ள காரணிகளை எவை?
II) மணற் கடதாசிகள் பயன்படுத்தி உராய்வு தங்கியுள்ள ஒரு காரணியை கண்டறிவதற்கான செயற்பாட்டை ஒழுங்குமுறைப்படி தருக?
III) எண்ணெய் பூசப்பட்ட நூல், கப்பி என்பன பயன்படுத்துவதன் நோக்கம் யாது?
IV) பொருளின் மேற்பரப்பளவு உராய்வு விசையில் செல்வாக்கு செலுத்தாது என்பதைக் காட்ட தேவையான பொருட்கள் உவை?


D.I) படத்தில் காட்டியவாறு O எனும் புள்ளியில் கோல் சமநிலைப்படுத்தட்டுள்ளது. விசைத் திருப்பத்தை சமப்படுத்த 8N விசை தொழிற்படும் தூரம் x ஐ கணிக்க?
II) 8N விசையை 4N ஆக குறைக்கும் போது x இன் பெறுமானம் குறையுமா? கூடுமா?





09. A.இரும்பு அரிப்பில் உலோகங்களில் செல்வாக்கை கண்டறிய தயார் செய்யப்பட ஒழுங்கமைப்பு வரிப்படம் தரப்பட்டுள்ளது.
I) இப் பரிசோதனையில் பின்வரும் அயன்களை கண்டறிய பயன்படும் காப்புகளை தருக?
a) $(OH)^-$ b) $Fe^{2+}$
II) இப் பரிசோதனையில் சோடியம் குளோரைட்டு பயன்படுத்த காரணம் யாது?
III) Mg தகட்டிற்கு அண்மையில் நடைபெறும் அரைஅயன் தாக்கத்தை தருக?
IV) எவ் ஒழுங்கமைப்பில் இரும்பு கதோட்டாக தொழிற்படுகிறது?
V) எவ் ஒழுங்கமைப்பில் இரும்பாணிக்கு அண்மையில் நீல நிறம் தோன்றும்?
VI)இப் பரிசோதனை முடிவில் இருந்து நீர் முன்னெடுக்க நடைமுறை பிரயோகம் ஒன்றை குறிப்பிடுக?




B.விரி வில்லை, ஒருங்கு வில்லை ஆகிய இரண்டும் விம்பங்களை உருவாக்கும் வீதம் உருவில் தரப்பட்டுள்ளது.
I) A,B என்பவற்றில் விரி வில்லை எது?
II) a) விம்பம் $I_1$, $I_2$ இல் உண்மை விம்பம், மாய விம்பம் எது என குறிப்பிடுக?
b) உண்மை விம்பம், மாய விம்பம் என்பதில் இருந்து நீர் விளங்குவது யாது?
III) A வகை வில்லையில் தோன்றும் விம்பம் உருவாக பொருள் எங்கு வைக்கப்பட வேண்டும்?
IV) A வகை வில்லை அன்றாட வாழ்வில் பயன்படும் சந்தர்ப்பம் ஒன்று தருக?
V) வில்லை A யில் பொருளலவான உண்மை விம்பம் பெற பொருள் எங்கு வைக்கப்பட வேண்டும்?




C. இரண்டு முறைகளில் துணிக்கைகள் அதிரும் விதம் தரப்பட்டுள்ளது.
I) C,D திசையில் துணிக்கைகள் அதிர்வடையும் பொறிமுறையை எவ்வாறு அழைக்கப்படும்?
II) A,B திசையில் துணிக்கை அதிர்வடையும் சந்தர்ப்பம் ஒன்று தருக?
III)வளியினூடாக பயணிக்க முடியாத அலை எது?
IV) ஒலி அலை எம்முறையான துணிக்கையின் அதிர்வு மூலம் ஊடு கடத்தப்படுகிறது.
V)இவ் அலைள் மின்காந்த அலைகளில் இருந்து வேறுபடும் முறைகள் இரண்டைக் குறிப்பிடுக.





சட்டத்தரணி ஜெகநாதன் தற்பரன்
(சட்டமுதுமாணி)

# சிறுவர்கள் பச்சை குத்தலாமா?

> தாமாகவே முன்சென்று பெற்றோர் அறியாத வண்ணம் சிறுவர் பச்சை குத்தினால் என்ன செய்வது? பச்சை குத்துதல் நடத்தப்பட்ட நிலையம், நடத்துபவர், இத்தகு செயலைக் கவனிக்காதிருந்த பெற்றோர் அல்லது பாதுகாவலர் என சம்பந்தப்பட்ட அனைவரும் குற்றஞ்சாட்டப்பட்டு வழக்கு முன்னிலைப்படுத்தப்படலாம்.

சிறுவர்களின் நலன் தொடர்பில் கடந்த இரு நாள்களில் எனக்கு வந்த தொலைபேசி அழைப்புக்களில் அநேகமானவர்கள் கேட்ட கேள்வியே தலைப்பு.

குதர்க்கமான, குத்தலான இப்பச்சை குத்தல் கேள்விகளுக்குள் ஆழமான அர்த்தம் பொதிந்திருப்பதனால் எனது பதிலினை இங்கு அனைவரும் தெரிந்திருக்கும் பொருட்டு பகிரங்கப்படுத்துகின்றேன்.

இலங்கையில் உள்ள எந்தச் சட்டமும் எவருக்கும் பச்சை குத்துதல் (TATTO) தொடர்பில் அல்லது அத்தகு பச்சைகுத்துதல் செயற்பாடுகளினை வரையறுத்து இருக்கவில்லை. எவற்றினையும் தடை செய்திருக்கவும் இல்லை. ஆனால் அத்தகு செயற்பாடுகளை சிறுவர்களுக்குச் செய்தல் கூடாதென தடை விதித்திருக்கின்றன. லண்டன், அயர்லாந்து, அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் சிறுவர்கள் பச்சை குத்துதலை நெறிமுறைப்படுத்தியுள்ளன.

இலங்கையில் அத்தகு சட்ட எற்பாடுகளுக்கு அமைவாக நோக்குமிடத்து சிறுவர்களுக்கு பச்சைகுத்துதல் செயற்பாடுகள் ஏற்புடையது அல்ல என்பது புலனாகின்றது. இதற்கு பின்வரும் சட்ட ஏற்பாடுகள் துணை நிற்கின்றன:-



* இலங்கை சித்திரவதைக்கு எதிரான சமவாயம் குறித்த சட்ட ஏற்பாடு (1994)

* இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பிரகாரம் அடிப்படை உரிமைகள் பிரிவு IIIஇன் சரத்து 11 (சித்திரவதை மற்றும் மனிதாபிமானமற்ற நடத்தை)

* சித்திரவதை மற்றும் மனிதாபிமானமற்ற நடத்தை மீறுகை தொடர்பான ஜெனிவா சமவாயம் குறித்த இலங்கை சட்டம் (2006)

* சிறுவர் உரிமைகள் சமவாயத்தில் படியாக இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேச சிறுவர் உரிமைகள் சமவாயம் குறித்த காலக்கிரமமாக அனுப்பி வைக்கப்பட்டிருந்த அறிக்கைகளின் (2008 மற்றும் 2018 அறிக்கைகள்) மீதான பரிந்துரைகளில் விபரிக்கப்பட்ட பிரேரணைகளின் பிரகாரம்.

இருப்பினும் சர்வதேச உரிமைகள் சமவாயம் அல்லது இலங்கை சிறுவர் சாசனம் இதனை ஏற்றுக் கொள்கின்றதா எனப் பல்வேறு கேள்விகள் எமக்குள் எழவே செய்கின்றன. அவற்றிற்கான பதில்கள் வருமாறு:-

1. சிறுவர் உரிமைகள் பகுதிக்குள் சிறுவர் தாம் விரும்பினால் பச்சை குத்தலாம் என்ற கருத்துச் சாரப்படி ஏதேனும் உரிமைகள் உள்ளனவா?

இல்லை. அத்தகு பொருள்கோடல்கள் தவறானவை. அத்தகு உரித்துக்கள், உரிமைகள் எவையும் குறிப்பிடப்படவில்லை.

2. சிறுவர் (16,17,18 வயது) விரும்பினால் பச்சை குத்தலினை ஏற்றுக் கொள்ளலாமா?

இல்லை. 18 வயதுக்கு உட்பட்டவர்கள் சிறுவர்கள் என்கின்ற வகையில் அவர்கள் உடல் ரீதியாக துன்புறுத்தப்படலாகாது என்கின்ற அடிப்படையில் பச்சை குத்துதல் என்பது சிறுவர் விருப்பப்படின் கூட அனுமதிக்கப்படலாகாது.

3. சிறுவர் பச்சை குத்துதல் என்பது குற்றமாகுமா?

உள்ளூர் வழக்கத்தின் படியாகவும் சாஸ்திர சம்பிரதாயங்களுக்கு அமைவாகவும் பச்சை குத்துதல் இன்னமும் பின்பற்றப்பட்டு வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. இது இன்னமும் விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படவும் இல்லை. இதன் காரணமாக இரு தரப்பின் சாதக பாதக நிலைகளும் அவதானிக்கப்படுதல் நன்று. நேரடியாக இவ்விடயங்களினைக் கையாள்வதற்கு சட்டங்கள் இல்லாதுள்ள பொழுதிலும் தண்டனைச் சட்டக்கோவை மற்றும் ஏற்கனவே மேலே விவரிக்கப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகளின் கீழ் சிறுவர்களைக் கொடுமைப்படுத்தியதற்காக சம்பந்தப்படும் திறத்தவர்கள் சரீர துன்புறுத்தல் செய்தமைக்கான சமூகப் பொறுப்புடைமையை மீறிய குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டிக்கப்படலாம். இவை கடூழிய குற்றங்களாகக் கருதப்படும்.

4. சிறுவர் பச்சை குத்துதல் என்பது ஏனைய நாடுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனவா?

இல்லை. ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, அயர்லாந்து போன்ற நாடுகளில் சிறுவர்கள் உரிமைகள் சமவாயத்தினை ஏற்றுக் கொண்டுள்ள





நாடுகளில் சட்டங்கள் நேரிடையாகவே சிறுவர் பச்சை குத்துதலினை தடைசெய்துள்ளன. 28.12.1976இல் ஐரோப்பிய ஒன்றியம் இது தொடர்பாக சட்டத்தினை அமுலுக்கு கொண்டுவந்தது. 2007 மற்றும் 2015இல் ஐரோப்பிய நாடுகளிலும் ஐக்கிய இராச்சியத்திலும் சிறுவர் பச்சை குத்தலைத் தடை செய்திருந்தன. இவ்வாறான சூழ்நிலையே ஐக்கிய அமெரிக்காவிலும் காணப்படுகின்றன.

5. தாமாகவே முன்சென்று பெற்றோர் அறியாத வண்ணம் சிறுவர் பச்சை குத்தினால் என்ன செய்வது?

பச்சை குத்துதல் நடத்தப்பட்ட நிலையம், நடத்துபவர், இத்தகு செயலைக் கவனிக்காதிருந்த பெற்றோர் அல்லது பாதுகாவலர் என சம்பந்தப்பட்ட அனைவரும் (திறத்தவர்கள் அனைவரும்) குற்றஞ் சாட்டப்பட்டு வழக்கு முன்னிலைப்படுத்தப்படலாம். சிறுவர்களின் சம்மதம் பெற்றோர்/பாதுகாவலர் ஒப்புதல் என்பது இங்கு கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். சிறுவர்களின் சம்மதம் உள்ளமை என்பது மட்டும் கவனத்தில் கொள்ளப்பட்டு தீர்வுகள் வழங்கப்படமாட்டாது. கடூழியப் பொறுப்பு என்பிப்பு எனப்படும் இவ்விதி சூதாட்டம், இணைவழி விளையாட்டுக்கள் (online games), மது பாவனை, போதைப்பொருள் பாவனை, கணனி மூலமான விபச்சாரம், தானியங்கி செயற்கை உபகரண தொகுதிப் பயன்பாடு (Drones and model aircraft) என சமகாலத்தே சிறுவர் உபயோகிக்கும், கையாளும் விடயப்பரப்புக்களுக்கு பொருத்தமானதாகும்.

6. இவற்றினை எப்படி கண்காணிப்பது?

பிள்ளையின் வளர்ச்சிப்படிநிலைகளுக்கு ஏற்றதான மேம்பாட்டு நிலை குறித்து (evolving capacity) பெற்றோர், பாதுகாவலர் வீட்டினை விட்டு சிறுவர் வெளியே செல்லும் போதும், உள்நுழையும் போதும், வசிக்கும் போதும் கவனிப்பு நிலையில் இருத்தல் அவசியமானது. இத்தகு உறவு நிலை பேணப்படாத இடத்து பாடசாலைச் சமூகம், மதத்தலைவர்கள், மதஸ்தானங்கள் மற்றும் சமூகக் கட்டமைப்புக்களின் உதவுகை பெறப்படலாம். உடல், உள ரீதியிலான மேம்பாடு குறித்த முடிவெடுத்தல்களில் சிறுவர்கள் வளர்ந்தவர்களின் சம்மதத்தினைப் பெற்றே செயற்பட வேண்டும் என சட்டமும் சமூகமும் எதிர்பார்க்கின்றது.

(08ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# ஐயப்பன் விரதமும் இளைஞர்களின் வகிபங்கும்

அங்கம் 01

நி.விஜேந்திரா
(மாணவர் ஒழுக்காற்று அதிகாரி, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்)



இன்றைய காலத்தில் வீர சைவ பெருமக்களாக வாழ்ந்த தமிழ் மக்கள் பல்வேறு சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்றால்போல் மதமாற்றங்கள் மற்றும் பல்வேறுபட்ட போதனைகளை எதிர்கொண்டு வருகின்றமை யாவரும் அறிந்த விடயம்.

ஆனால் எங்கள் சைவசமயம் காத்து, பேணி வந்த பல்வேறு சித்தர் பெருமக்களும், ஞானிகளும், அறிவியல் சிந்தனையாளர்களும் வாழ்ந்த புண்ணிய பூமி எமது மண். ஆனால் நம் முன்னோர் வகுத்த நெறிகளையும் வரன் முறைகளையும் இயற்கையோடு இணைந்த வாழ்வியல் முறைகளையும் இன்றைய தலைமுறையினர் ஏற்று வாழ மறுக்கின்ற சூழல் காணப்படுவதுதான் பல்வேறு வணக்க வழிபாடுகள், மத மாற்றங்களும் இடம்பெற வழிகோலுகின்றது.

அதற்கு நாங்கள் அனைவரும் பொறுப்பு ஏற்க வேண்டியவர்களாகவுள்ளோம்.

இன்றைய பெற்றோர்கள், தங்களின் பெற்றோர்கள் காத்து, வளர்த்த பல்வேறு அறிவியல் விஞ்ஞான பூர்வமான விளக்கங்கள், வணக்க முறைகளை தம்பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுப்பதில் பின் நிற்பது வேதனைக்குரிய விடயம். அவற்றில் சிலவற்றைக் குறிப்பிடலாம்.

1.சாத்வீகமான உணவுப்பழக்க முறை.

2.விரத அனுட்டானங்கள்.

3.கோயில்களிற்கு செல்லல்.

இவற்றில் இன்றைய தலைமுறையினரின் உணவுப் பழக்க வழக்கம் முதன்மையானது.

ஏன் என்றால் எங்களுடைய அம்மம்மாக்களோ, அப்பப்பாக்களோ Diet என்ற பெயரில் பணத்தை செலவழித்தனர் என்றோ அல்லது மருத்துவர்களை நாடிச் சென்றார்கள் என்றோ இன்னும் சொல்லப்போனால் பண்ணைக் கடற்கரையில் நடைப்பயிற்சி மேற்கொண்டனர் என்றோ நாங்கள் யாரும் அறியவில்லை. ஏன் என்றால் அவர்கள் அனைவரும் அடிப்படையான நல்ல பாட்டி வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற வைத்திய முறையை தெரிந்து வைத்திருந்த அறிஞர்கள். அத்துடன் சைவ சமய விழுமியங்களில் முதன்மையான சாத்வீகமான உணவுப் பழக்கவழக்கங்களை கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். இதை அவர்கள் விரத அனுட்டானங்கள் ஊடாக கடைப்பிடித்தார்கள். விரதமுறைகளில் பல்வேறு முறைகள் உள்ளன. சாத்வீகமான உணவுப் பழக்க வழக்கமும் ஓர் விரத முறையே ஆகும். நம் முன்னோர்களை முட்டாள்கள் என்று எண்ணாதீர்கள். அவர்கள் ஒவ்வொருவரும் இல்லறயோகிகளாகவும் இல்லற் சித்தர்களாகவும் அடிப்படை விஞ்ஞானம் (Basic science) அறிந்தவர்களாகவும் வாழ்ந்திருக்கிறார்கள். எங்கள் மரபணுக்களில் அவர்களது மரபுகளும் இருக்கின்றன. அதனால்தான் எவ்வாறுதான் மதமாற்றங்கள் நடைபெற்றாலும், இருட்டடிப்புக்கள் செய்யப்பட்டாலும், மீண்டும் மீண்டும் புத்துயிர் பெற்றுக் கொண்டுதான் இருக்கிறோம்.

அந்த வகையில்தான் இந்த ஐயப்பன் விரதமும் காணப்படுகிறது. மாதங்களில் சிறந்த மாதங்களாகிய கார்த்திகை, மார்கழி இந்த இரண்டும் சைவ சமயத்தவர்களிற்கு மிக உகந்த மாதங்கள். அந்த இனிய காலத்திலே தமிழ்க் கார்த்திகை மாதத்திலே தொடங்கி தைத் திருநாள் தமிழிற்கு தை முதலாம் திகதி வரைக்கும் இந்த ஐயப்பன் வழிபாடு நடைபெறுகின்றது.

இதற்கிடையில் பிள்ளையார் பெருங்கதை, திருவெம்பாவை போன்ற விரதங்களும் வழிபாடுகளும் நடைபெறுகின்ற இனிமையான காலம். எனவே எமது சைவ இளைஞர்கள் இந்தக் காலப்பகுதியில் சாத்வீகமான உணவுப் பழக்கவழக்கங்களை சிக்கனப்பிடிக்கின்றார்கள். இவ்விரதத்தை பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனுஷ்டிக்கின்றார்கள். இன்றைய காலத்தில் இளம் சமுதாயத்தினருடைய பங்களிப்பும் அதிகமாகக் கிட்டுகின்றது. இதனால் எமது வாழ்விலும் 'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்' - என்ற புராண வரிகளிற்கு இணங்க சமுதாய சீர்திருத்தங்கள் நடைபெறுவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

உதாரணமாக சென்ற ஆண்டு தமிழ் பத்திரிகையில் நான் ஒரு விடயத்தைப் படித்திருந்தேன். சட்ட வல்லுநர்களால் கூறப்பட்ட விடயம் அது. இந்தக் காலப்பகுதியில் குற்றவியல் நடவடிக்கை குறைவாக காணப்படுகின்றதாம். இதைப் பலரும் பல்வேறு விதமாக விமர்சித்தாலும் பெதுவான பார்வையில் ஒரு நேரான சிந்தனையாகப் பார்த்தால் ஒரு சமூக சீர்திருத்தம் நடைபெறுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

சைவப்பெருமக்களான இளைஞர்கள் நல்ல குருநாதரை நாடி அவரவர்களுடைய ஆசீர்வாதத்துடன் தங்களின் பெற்றோரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி, நல்லதோர் கைங்கரியமான புனித மாலை அணிந்து, நாற்பத்து எட்டு நாள்கள் மண்டல விரதம் பூண்டு, சிற்றின்பங்களை விடுத்து, பேரின்ப பெருமானாகிய இறைவனை வழிபடுகின்றார்கள். உண்மையிலேயே இந்த ஐயப்பன் வழிபாட்டில் உள்ள அனைத்து முறைகளும் பெரும் அறிவியல் பூர்வமான விடயங்களாகும்.

இந்த நாற்பத்தெட்டு நாள்கள் என்பது எண்களின்படி மிகவும் உன்னதமானது. இந்த நாள்களில் அவர் எந்த நோக்கத்தை நினைத்து மாலை அணிகின்றாரோ அந்த நோக்கம் நிறைவேறுவது மரபு. எனவே இதற்கு அத்தனை ஐயப்பன் பக்தர்களும் சாட்சிகளாவர்கள். அந்த வகையில் ஒருவர் குடிப் பழக்கவழக்கத்திற்கு ஆளாகியிருந்தால் அவர் இந்த நாற்பத்தெட்டு நாள்களும் அதைத் தவிர்க்க வேண்டும். அல்லது இந்தப் பழக்க வழக்கங்களிலிருந்து விடுபட வேண்டும் என்ற எண்ணத்தில் தொடங்குவாராயில் அவருடைய மூளையின் கலங்களில் மாற்றம் ஏற்படுகின்றது. அதாவது எண்ணங்கள் மாற்றம் அடைகின்றன. இதனை நான் உளவியலில் எண்ணமாற்று சிகிச்சை (cognitive behavior therapy ) என்று அழைப்பார்கள் இதைத்தான் அன்றே எங்கள் ஆன்றோர்கள் சித்தர் பெருமக்கள் மண்டல



விரதம் 48 நாள்கள் என்ற எண்ணிக்கையில் வைத்துள்ளார்கள்.

உதாரணமாக ஓர் இறை விக்கிரகம் பிரதிஷ்டை செய்கின்றபோது அதற்கு எண்ணெய்க்காப்பு வைக்கின்ற மரபு காணப்படுகின்றது. அவ்வாறு எங்களது கரங்களால் எண்ணெயை எடுத்து அவரது திருமேனியில் எண்ணெயை ஊற்றுகின்ற வைபம் இவ்வாறு இந்த கைங்கரியத்தை செய்பவர் 48 நாள்கள் சைவ ஆசாரம் பேணி சாத்வீகமான உணவுப் பழக்கவழக்கத்தை கைக்கொள்ள வேண்டும் என்று கூறப்படுவது கவனிக்கத்தக்கது.

(தொடரும்...)

## 58 ஆயிரம் பட்டதாரிகளுக்கு பயிற்சி நிறைவில் நியமனம்!

தற்போதைய அரசாங்கம் 58 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்கியுள்ளது என அரச சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

முதலாவது கட்டமாக 50 ஆயிரம் பேருக்கும், இரண்டாவது கட்டமாக 8 ஆயிரம் பேருக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

அவர்கள் ஒரு வருட கால பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். பயிற்சிக்காலத்தில் ரூபா 20 ஆயிரம் கொடுப்பனவும் வழங்கப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

பயிற்சி காலம் நிறைவடைந்ததும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சிறுவர்கள் பச்சை....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் வீட்டை விட்டு வெளிச் செல்லும் சிறுவர்கள் தாம் அபாய நிலையில் உள்ள போதும், தமது நலன் குறித்த அக்கறைகள் இருக்கின்ற போதும், வளர்ந்தவர்களின் கருத்துக்களினை செவிசாய்க்கவும், ஒருமித்த கருத்துக்களினைக் கொண்டிருக்கவும் சிறுவர்கள் நல்வழிப்படுத்துதல் அவசியமானது. இதனை வளர்ந்தவர்களின் (சமூகப்) பொறுப்புடைமையாக கருதி செயற்படவேண்டும். கண்காணிக்கப்படாமை குறித்த தவறுகைகள் சட்டநடவடிக்கைகளுக்கு பாரப்படுத்தப்படலாம்.

7. பச்சை குத்திய மாணவனை கல்விக் கூடங்களுக்கு அனுமதிப்பதில் இருந்து மறுப்பு செய்யலாமா?

பாடசாலை என்பது மாணவரை நல்வழிப்படுத்துவதற்காகவும், நேரிய சிந்தனைக் கருவூலத்தை நோக்கி திசைமுகப்படுத்தும் ஓரிடமாகக் கருதப்படுகின்ற காரணத்தினால் பாடசாலைச் சமூகம் கருதும் பட்சத்தில், ஒருமித்துத் தீர்மானம் மேற்கொண்டால் மாணவனின் அனுமதி நன்நோக்கு கருதி தடுக்க ஏதுநிலை உண்டு. சம்பந்தப்பட்ட விடயத்தில் தீர்வு எட்டப்படுவதற்காக தற்காலிகமாக ஏனைய சிறுவர்களை நல்வழிப்படுத்தும் நோக்குடன் எடுக்கப்படும் அத்தகு தீர்மானம் கேள்விக்கு உட்படுத்தப்படல் கடினம். அத்தகு தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் பாடசாலைசார் சமூகத்திற்கு உள்ளது. இதனை பெற்றோர், பாதுகாவலர், சிறுவர் பாதுகாப்பு தொடர்புறு அலுவலர்கள், பாடசாலை மாணவர் சீர்மயப்படுத்தும் குழு இணைந்து விடய மாநாடு முறைமை மூலம் அணுகி, சிறந்த தீர்வு என்பது எட்டப்படலாம். இலங்கை சிறுவர் சாசனம் இதனையே வலியுறுத்துகின்றது.

8. பச்சை குத்தியதாக கருதும் சிறுவரை அல்லது மாணவனை உடற்பரிசோதனை செய்து கொள்வதற்குரிய அதிகாரம் யாரிடம் உள்ளது?

இவை யாவும் வைத்தியசாலை மூலம் சட்ட மருத்துவ அதிகாரி அல்லது அத்தகு நிலையில் உள்ள வைத்திய அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினரால் மட்டுமே செய்து கொள்ளப்படலாம். உடற்கூற்றியல், மரபணுப் பரிசோதனைகள், வலிமுகாமைத்துவம் தொடர்பில் ஆராய்வது, அத்தகு உடற்சோதனைகள் மேற்கொள்ளப்படுதல் என்பது சட்ட ரீதியாக செய்து கொள்ளப்படல் வேண்டும். வளர்ந்தவர்களின் பிரசன்னமும் சம்மதமும் இதற்கு முக்கியமானவை. ஏனைய நேரடியான பிற தலையீடுகள் தவிர்க்கப்பட வேண்டியனவே.

9. யாரிடம் இவை பற்றி முறையிடுவது?

மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அலுவலர்

பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவு - (அருகில் உள்ள காவல் துறை அலுவலகம்)

1929 துரித அழைப்பு இலக்கம் (சிறுவர் உதவு நிலையம்)

மனித உரிமைகள் ஆணைக்குழு

இவற்றிற்கு நேரடியாகவோ, கிராம அலுவலர் மூலமாகவோ, பாடசாலை / மதத் தலைவர்/ சமாதான நீதவான் மூலமாகவோ முறையிடலாம்.

10. யார் தகவல் வழங்கலாம்? சிறுவருடன் தொடர்புறும் எவரும் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்கிட முடியும். இரகசியத் தன்மை பேணப்படும். சமூக ஊடகங்கள் மூலம் வெளியிடுவது பகிர்தலும் குற்றமே.

இவற்றினை செயல்வடிவமாக்கும் பொறுப்பு சிறுவர் நலனில் அக்கறை கொண்ட தனியாங்கள் ஒவ்வொருவருக்குமானது. இதனை மேலும் காலம் தாழ்த்தாது விளங்கிக்கொள்ளவும் அதன் வழி செயற்படவும் இப்பொழுதே திடசங்கற்பம் கொள்வோம்.

# அரச இயந்திரத்தால் ஒருமித்த நாடு: மனதளவில் இரண்டுபட்ட நாடுகளே!

## பொலிஸாருக்கு வகுப்பெடுத்தார் சிறிதரன் எம்.பி.



அரச இயந்திரத்தால் ஒருமித்த நாடாகவும் மனதளவில் இரண்டு நாடுகளாகவும் இலங்கை இருக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரெழுச்சிப் பேரணியில் கலந்துகொண்டமைக்காக கிளிநொச்சி பொலிஸாரால் நாடாளுமன்ற உறுப்பினரின் காரியாலயத்தில் வைத்து அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது. குறித்த வாக்கு மூலத்தில் பொலிஸாரின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த நாட்டிலே தமிழர்களின் காணிகள் முப்படைகளால் வன்பறிப்புச் செய்யப்பட்டிருக்கின்றன. தொல்லியல் திணைக்களம் என்ற பெயரிலும் வனவளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் போன்றவை ஊடாகவும் காணிகள் சுவீகரிப்புச் செய்யப்படுகின்றன.

இலங்கையில் பௌத்த விகாரைக்காக காணிகள் உறுதியோடு வழங்கப்படுகின்றன. ஆலயங்களுக்கு குத்தகை முறையிலேதான் வழங்கப்படுகின்றன. முப்படையினரைப் பயன்படுத்தி ஒரு தேசமாக இலங்கையை ஆட்சியாளர்கள் வைத்திருக்கிறார்களே தவிர, மனதளவில் இரண்டு நாடுகளாகவே இலங்கை இருக்கிறது. அந்த வகையில் தான் அரசாங்கமும் செயற்படுகிறது.

இதேவேளை, பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டம்கூட இந்த நாட்டிலே தமிழ் பேசும் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகவே இடம்பெற்றது. குறித்த போராட்டம் வடக்கு கிழக்கு சிவில் சமூக அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தப் போராட்டத்துக்கான அழைப்பு எமக்கு எவராலும் தனித்து விடப்படவில்லை. நாம் பத்திரிகையில் வெளியான செய்திகளை அடிப்படையாக வைத்தே பேரணியில் கலந்துகொண்டோம்.

நாம் இந்தப் போராட்டத்தை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தும் வகையிலோ, இலங்கை இறையாண்மைக்கு எதிராகவோ, ஆயுத வழியிலோ போராடவில்லை. அரச இயந்திரங்களால் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளுக்காகவும் அரச பயங்கரவாதத்துக்கு எதிராகவுமே அமைதி வழியில் போராட்டம் நடத்தப்பட்டது.

சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் வராத கொரோனா தொற்று, தமிழர்கள் நடத்தும் போராட்டத்திலா வரப்போகிறதா? என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனிடம், சுமார் ஒன்றரை மணித்தியாலங்களுக்கு பொலிஸாரால் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## 15.02.2020 தொடக்கம் 19.02.2021 வரையிலான சந்தையில் முக்கிய பயிர்களின் விலை நிலைவரம் ஒரே பார்வையில்!

### தம்புள்ள, Pettah, சந்தையின் விலை நிலைவரம்

15.02.2021 தொடக்கம் 20.02.2021 வரையான காலப்பகுதியில் பெற்றா தம்புள்ள சந்தைகளில் தேசி, உள்ளூர்சிவப்பு வெங்காயம், பெரிய வெங்காயம், தேங்காய், கோவா, தக்காளி, போஞ்சி, கரட், கத்தரி, பூசணி, பச்சை மிளகாய் போன்ற பயிர்களின் விலைகளில் தளம்பல்நிலை அவதானிக்கப்பட்டது இதனால் இவை முக்கிய கவனத்துக்குரிய பயிர்களாக இருந்தன.

01. நுவரலியா மற்றும் லகலா பகுதிகளிலிருந்து குறைந்த வழங்கல். அல்லது சாதகமான வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் போஞ்சி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

02. நுவரலியா, கந்தபோலா, ராகலா பகுதிகளிலிருந்து குறைந்த வழங்கல் அல்லது சாதகமான வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் கரட்டின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

03. யாழ்ப்பாணம் மற்றும் புத்தளம் நொச்சியகம பகுதிகளில் இருந்து குறைந்த வழங்கல் காரணமாக அல்லது சாதகமான வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் பச்சை மிளகாயின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

04. மொனராகல, பிபிலி பகுதிகளில் இருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தையில் தேசி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

05. சிகிரிய, லகலா, கலென்பிந்துநுவேவா பகுதியில் இருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் பூசணிக்காயின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

06.புத்தளம், யாழ்ப்பாணத்திலிருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாகவும் இறக்குமதி செய்யப்பட்ட வகைகள் கிடைக்காமையாலும் தம்புள்ள சந்தையில் உள்ளூர் சின்ன வெங்காயத்தின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

07. கலென்பிந்துநுவேவா மற்றும் துதுவேவா பகுதிகளிலிருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் கத்தரி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

08. குலியபிட்டிய, குருநாகல் மற்றும் மெல்சிரிபுரா பகுதிகளில் இருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் தேங்காயின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

09.சிகிரிய, யதவத்தா பகுதிகளில் இருந்து குறைந்த வழங்கல் அல்லது சாதகமான வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நாரஹன்பிடா சந்தைகளில் தக்காளியின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

10. பாகிஸ்தானில் இருந்து குறைந்த மற்றும் உயர்தர வகை பெரிய வெங்காயம் கிடைப்பதால் இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயத்தின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

11. புத்தளம், துதுவேவா பகுதிகளில் இருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் உள்ளூர் கோவா விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

### Pettah சந்தை மொத்த விலைகள்

| | 15.02.2021 | 16.02.2021 | 17.02.2021 | 18.02.2021 | 19.02.2021 |
|---|---|---|---|---|---|
| பீட்ரூட் | 150 | 115 | 105 | 123 | 137 |
| கேரட் | 125 | 118 | 105 | 103 | 135 |
| கோவா | 75 | 75 | 87 | 87 | 98 |
| தக்காளி | 237 | 228 | 258 | 238 | 240 |
| கத்திரிக்காய் | 87 | 88 | 80 | 96 | 88 |
| பூசணி | 135 | 122 | 107 | 118 | 133 |
| புடலங்காய் | 87 | 86 | 88 | 75 | 78 |
| பச்சை மிளகாய் | 461 | 450 | 400 | 458 | 375 |
| தேசி | 85 | 75 | 85 | 83 | 83 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர்) | 307 | 347 | 267 | 250 | 325 |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | 320 | 300 | 300 | 279 | 285 |
| பெரிய வெங்காயம் (உள்ளூர்) | | | | | |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 127 | 100 | 105 | 96 | 115 |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | 128 | 133 | 133 | 113 | 138 |
| உருளைக்கிழங்கு (இறக்குமதி) | 109 | 105 | 105 | 103 | 106 |
| உலர்ந்த மிளகாய் (இறக்குமதி) | 421 | 483 | 490 | 487 | 485 |
| தேங்காய் (சராசரி) | 85 | 85 | 85 | 85 | |

### தம்புள்ள சந்தை மொத்த விலைகள்

| | 15.02.2021 | 16.02.2021 | 17.02.2021 | 18.02.2021 | 19.02.2021 |
|---|---|---|---|---|---|
| பீட்ரூட் | 155 | 140 | 140 | 105 | 160 |
| கேரட் | 145 | 135 | 75 | 115 | 125 |
| கோவா | 85 | 75 | 55 | 53 | 50 |
| தக்காளி | 215 | 195 | 215 | 215 | 225 |
| கத்திரிக்காய் | 95 | 75 | 105 | 55 | 65 |
| பூசணி | 115 | 95 | 95 | 103 | 78 |
| புடலங்காய் | 95 | 105 | 115 | 88 | 100 |
| பச்சை மிளகாய் | 415 | 500 | 395 | 415 | 445 |
| தேசி | 85 | 95 | 115 | 85 | 85 |
| சின்ன வெங்காயம் உள்ளூர் | | | 228 | | 208 |
| சின்ன வெங்காயம் இறக்குமதி | | | 273 | 278 | 268 |
| பெரிய வெங்காயம் உள்ளூர் | | | | | |
| பெரிய வெங்காயம் இறக்குமதி | 133 | 95 | 93 | 73 | 58 |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | | | | 123 | 118 |
| உலர்ந்த மிளகாய் இறக்குமதி | 518 | 513 | | | |
| தேங்காய் சராசரி | 75 | 75 | 77 | 74 | 75 |

### தம்புள்ள சந்தை சில்லறை விலைகள்

| | 15.02.2021 | 16.02.2021 | 17.02.2021 | 18.02.2021 | 19.02.2021 |
|---|---|---|---|---|---|
| பீட்ரூட் | 175 | 165 | 165 | 125 | 188 |
| கேரட் | 165 | 155 | 95 | 135 | 145 |
| கோவா | 85 | 95 | 75 | 73 | 78 |
| தக்காளி | 235 | 215 | 235 | 235 | 245 |
| கத்திரிக்காய் | 115 | 95 | 125 | 75 | 85 |
| பூசணி | 135 | 115 | 115 | 123 | 98 |
| புடலங்காய் | 115 | 135 | 135 | 108 | 125 |
| பச்சை மிளகாய் | 435 | 520 | 415 | 435 | 465 |
| தேசி | 115 | 115 | 135 | 105 | 105 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர்) | | | 238 | | 218 |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | 308 | 300 | 283 | 288 | 278 |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 143 | 103 | 103 | 80 | 108 |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | | 148 | | 133 | 128 |
| தேங்காய் (சராசரி) | | 80 | 82 | 79 | 85 |

### தம்புள்ள சந்தை பழங்கள் மொத்த விலைகள்

| பழங்கள் | 15.02.2021 | 16.02.2021 | 17.02.2021 | 18.02.2021 | 19.02.2021 |
|---|---|---|---|---|---|
| வாழைப்பழம் | 45 | 48 | 48 | 43 | 43 |
| பப்பாசி | 45 | 53 | 48 | 28 | 58 |
| அன்னாசி | 85 | 78 | 78 | 85 | 75 |
| ஆப்பிள் (இறக்குமதி) | 50 | 50 | 50 | 50 | 50 |
| ஆரஞ்சு (இறக்குமதி) | 80 | 80 | 80 | 80 | 80 |

### தம்புள்ள சந்தை பழங்கள் சில்லறை விலைகள்

| பழங்கள் | 15.02.2021 | 16.02.2021 | 17.02.2021 | 18.02.2021 | 19.02.2021 |
|---|---|---|---|---|---|
| வாழைப்பழம் | 65 | 68 | 68 | 63 | 63 |
| பப்பாசி | 65 | 73 | 68 | 50 | 78 |
| அன்னாசி | 105 | 98 | 98 | 105 | 95 |

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி



# இந்திய தூதரக அதிகாரிகள் மன்னார் வரை கடல் பயணம்





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,பெப்.21

குறிகட்டுவானில் இருந்து மன்னார் வரை படகில் இந்திய தூதரக அதிகாரிகள், குடும்பஸ்தர்கள் நேற்றைய தினம் கடல்வழிப் பயணம் ஒன்றை மேற்கொண்டனர்.

யாழில் உள்ள இந்திய துணைத் தூதரக அதிகாரிகள், அவர்தம் குடும்பத்தவர்கள், பிள்ளைகள் என சுமார் 30பேர் யாழ்ப்பாணம் குறிகட்டுவானில் இருந்து காலையில் படகு மூலம் புறப்பட்டு மன்னாரை அடைந்தனர். அவர்கள் மீண்டும் கடல்வழியாகவே யாழ்ப்பாணம் திரும்பினர்.

யாழில் உள்ள தீவுகள் சிலவற்றில் நிர்மாணப் பணிகள் சீன நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் தீவுகளும் அதனைச் சூழவுள்ள கடலும் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளன.

நேற்று கடலில் பயணித்த இந்திய அதிகாரிகள் குழுவினர் மன்னாரிற்கும் இந்தியாவிற்கும் இடைப்பட்ட மணல் திட்டுகள் தொடர்பில் கவனம் செலுத்தினர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நயினாதீவைச் சேர்ந்த யொட் படகு மூலம் இப் பயணம் இடம்பெற்றது. இப் பயணத்திற்கான அனுமதி கடற்படையினரால் வழங்கப்பட்டிருந்தது.

# இலங்கைக்கு எதிராக விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## மூத்த சர்வதேச பிரமுகர்கள் கூட்டாக வலியுறுத்து



இலங்கை அதன் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதன் சொந்த நீதி நிறுவனங்களை நாட முடியாத நிலையை உருவாக்கியுள்ளது என்று மனித உரிமைகள் தொடர்பில் குரல் கொடுத்து வரும் உலகளாவிய மூத்த முக்கியஸ்தர்கள் குழுவொன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சர்வதேச சமூகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்தக் குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையர் மிலேி பச்லெட் இலங்கை தொடர்பில் அண்மையில் விடுத்திருந்த அறிக்கையின் பால் ஐ.நா. உறுப்பு நாடுகள் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் 20 இற்கும் மேற்பட்ட நிபுணர்களும் முன்னாள் தலைவர்களும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கைப்படி, இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களும் அவர்களின் பிரதிநிதிகளும் உலகளாவிய, எல்லைகள் கடந்த விசாரணை - அதிகாரத்தின் (நியா யாதிக்கத்தின்) கீழ் நீதியை நாடுவதற்கு சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

# யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியினுள் வெளி மாவட்ட பஸ்கள் பிரவேசிக்கத் தடை!

## மீறினால் சட்ட நடவடிக்கை என மேயர் எச்சரிக்கை



யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட வைத்திய சாலை வீதிப் பகுதியில் வெளிமாவட்டத்திற்கான தனியார் மற்றும் அரச பஸ்கள் உள்நுழைவதற்கும் வெளிச்செல்வதற்கும் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தத் தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

வெளிமாவட்டங்களில் இருந்து வருகின்ற பஸ்கள் யாழ்.போதனா வைத்தியசாலை வீதியைப் பயன்படுத்தி உள்நுழைவதும் வெளிச்செல்வதும் இன்று முதல் தடை செய்யப்பட்டுள்ளது. அதனை மீறி வீதியைப் பயன்படுத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், இன்று முதல் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு எச்சரிக்கை வழங்கப்படவுள்ளது. அத்துடன் எதிர்வரும்திங்கட்கிழமைமுதல்வழக்குப்பதிவு மேற்கொள்ளப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அரச மற்றும் தனியார் பஸ்கள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள வெளிமாவட்ட பஸ் நிலையத்தைப் பாவிப்பதற்குமறுத்து வருவதையடுத்தே யாழ்.மாநகர சபையால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், யாழ்.மத்திய நகரப் பகுதியில் நிலவுகின்ற போக்கு வரத்து நெரிசல் குறித்த வெளிமாவட்ட பஸ்கள் தரிப்பதனாலேயே ஏற்படுகின்றது. புதிய நடைமுறையைப் பயன்படுத்தி பஸ்களை புதிதாகத் திறக்கப்பட்ட தரிப்பிடத்தில் நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசலைத் தடுக்கலாம் - என்றுள்ளது.

# யாழ்.பல்கலைக்கு பி.சி.ஆர். இயந்திரம்

## கையளிக்க வருகின்றார் அமெ. தூதுவர்



யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில்அமைந்துள்ளபி.சி.ஆர்பரிசோதனை ஆய்வுகூடத்துக்கு யு.எஸ்.எயிட் இனால் அன் பளிப்புச் செய்யப்பட்ட பி.சி.ஆர். இயந்திரத்தைச் சம்பிரதாய பூர்வமாகக் கையளிக்கும்நிகழ்வு எதிர்வரும் 23ஆம் திகதி செவ் வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா பி டெப்லிட்ஸ் அம்மையார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு, யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி வைத்திய நிபுணர், பேராசிரியர் எஸ். ரவிராஜிடம் பி.சி.ஆர். இயந்திரத்தைச் சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன், யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் எஸ். ஸ்ரீ.பவானந்தராஜா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் ஆரம்பித்த காலத்தில் வடக்கில் கொரோனாத் தொற்றாளர்களை அடையாளம் காண்பதற்கான வசதிகள் இல்லாத நிலையில், இங்கிருந்து சேகரிக்கப்படும் மாதிரிகளை அநுராதபுரம் மற்றும் தென்னிலங்கையில் அமைந்திருக்கும்பி.சி.ஆர். பரிசோதனை ஆய்வுகூடங்களுக்கு அனுப்பி முடிவுகளைப் பெற வேண்டியிருந்தது. இதனால் முடிவுகளைப் பெறுவதில் பெரும் அசௌகரியங்கள் காணப்பட்டமையுடன், தாமதமும் ஏற்பட்டது.

இந்நிலையில், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம் தன்னிடமிருந்த ஒரேயொருபி.சி.ஆர். இயந்திரத்தைக் கொண்டு, கடந்த வருடம் ஏப்ரல் மாதமளவில் பி.சி. ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள ஆரம்பித்தது. இதனால் வடக்கில் பெறப்பட்ட மாதிரிகளை இங்கேயே பரிசோதித்து, முடிவுகளை விரைவாகப் பெற்றுக்கொள்ள முடிந்தது. இதன் பின்னரே யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பி.சி.ஆர். பரிசோதனை ஆய்வு கூட வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

தற்போது யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் உள்ள இரண்டு பி.சி. ஆர். இயந்திரங்களைக் கொண்டு நாளொன்றுக்கு சராசரியாக 300 மாதிரிகளைப் பரிசோதிக்கக் கூடிய வசதிகள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் நாடுகளின் ஆதரவு இலங்கைக்கே

## தினேஷ் அதீத நம்பிக்கை




ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடரில் முஸ்லிம் நாடுகளின் ஆதரவு இம்முறையும் இலங்கைக்குக் கிடைக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன நம்பிக்கை வெளியிட்டார்.

ஜனாஸா விவகாரம் இதில் தாக்கத்தைச் செலுத்தாது எனவும், முஸ்லிம் நாடுகளின் பிரதிநிதிகளுக்கு இது குறித்து தெளிவுபடுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம் மக்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படும் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறிய கருத்து உண்மையே எனவும் அவர் குறிப்பிட்டார்.

சுகாதார நிபுணர் குழுவின் பரிந்துரையையே பிரதமர் தெரியப்படுத்தினார் எனவும், இது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மேற்கு முனையம் குறித்தும் போராட்டம் நடத்த தொழிற்சங்கங்கள் அதிரடி முடிவு

கொழும்பு, பெப். 20

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தைப் போன்று மேற்கு முனையம் தொடர்பாகவும் போராட்டங்களை நடத்துவதற்குத் துறைமுக தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

போராட்டங்கள் தொடர்பாக ஏற்கனவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என அகில இலங்கை துறைமுக ஊழியர் சங்கத்தின் செயலாளர் நிரோஷன் ஹொரகானகே தெரிவித்தார்.

இந்திய நிறுவனத்துக்கு கிழக்கு முனையத்தை வழங்குவதற்கு ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில் அதற்குத் தொழிற்சங்கங்களும், அரசியல் கட்சிகளும் எதிர்ப்பு வெளியிட்டதைத் தொடர்ந்து அந்தத் தீர்மானத்தை அரசு கைவிட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து மேற்கு முனையத்தை இந்தியா மற்றும் ஜப்பான் நிறுவனங்களுக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வழங்குவதற்கான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும் மேற்கு முனையத்தையும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு இடமளிக்க முடியாது என்று துறைமுக தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

கிழக்கு முனையத்தைப் போன்று மேற்கு முனையமும் முழுமையாக இலங்கை துறைமுக அதிகார சபையின் கீழே இருக்க வேண்டும் எனவும், இதனால் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அதனைக் கையளிக்க முடியாது எனவும் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

அவ்வாறு மேற்கு முனையத்தை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படுமாக இருந்தால் அதற்கு எதிராக முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்து தற்போது தொழிற்சங்கள் கூடி கலந்துரையாடி வருகின்றன என்று அகில இலங்கை துறைமுக ஊழியர் சங்கத்தின் செயலாளர் நிரோஷன் ஹொரகானகே மேலும் கூறினார்.

# சஹ்ரானின் போதனையில் பங்கேற்ற பெண்ணொருவர் ரி.ஐ.டியால் கைது!

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் ஹாஷிமின் அடிப்படைவாதப் போதனைகளில் கலந்துகொண்ட பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாவனல்லை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயது பெண்ணே நேற்றுமுன்தினம் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.


பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

ஈஸ்டர் தாக்குதலை மேற்கொண்ட சஹ்ரானின் அடிப்படைவாத வகுப்புகளில் கலந்துகொண்ட 6 பெண்கள் கடந்த டிசெம்பர் மாதம் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

நேற்று கைதுசெய்யப்பட்ட பெண்ணின் குடும்ப உறுப்பினர்கள் மாவனல்லை புத்தர் சிலை உடைப்பு சம்பவத்தில் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சமூக மரியாதை, செல்வாக்கு என்றால் என்ன தெரியுமா?

ப்ரியமதா பயஸ்



சமூக மரியாதை, செல்வாக்கு என்றெல்லாம் சொல்கிறார்களே, அதற்கெல்லாம் என்ன பொருள்? நம்மீது பிறர் கொண்டிருக்கிற அபிப்பிராயம்தான் அவையெல்லாம்! இந்த அபிப்பிராயங்களை அவர்களாக உருவாக்கிக் கொள்வதில்லை. நம்முடைய வார்த்தைகள், செயல்பாடுகள், அணுகுமுறைகள் எல்லாம் சேர்ந்து நம்மீது சில அபிப்பிராயங்களைக் கட்டமைக்கிறது.

நாம் நல்ல மனநிலையில் இருப்பதைப் பார்ப்பவர்கள், இவர் மிகவும் அன்பான மனுஷன் என்று முடிவெடுக்கிறார்கள். எதற்கோ, யார் மீதோ அளவு கடந்து கோபப்பட்டதைப் பார்ப்பவர்கள் அய்யோ சரியான சிடுமூஞ்சி என்று முத்திரை குத்திவிடுகிறார்கள்.

மொத்தத்தில், நம்மீதான சமூக அபிப்பிராயங்களுக்கு நாமே காரணம். ஒவ்வொரு தனிமனிதரையும், அவரைச் சுற்றியுள்ள சமூகம் மிக உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. எனவே, நமக்கு சமூக மரியாதை, செல்வாக்கு, மற்றவர்களின் பாராட்டு எல்லாம் வேண்டுமென்றால் நாமே எளிதாக அவற்றை உருவாக்கிக் கொள்ளலாம்.

உங்கள் தோற்றம் : உங்களைப் பற்றிய முதல் அபிப்பிராயம், உங்கள் தோற்றத்திலிருந்தே தொடங்குகிறது. தோற்றம் என்பது வெளித்தோற்றம் மட்டுமல்ல. உங்கள் நலனில் உங்களுக்கிருக்கும் அக்கறை, உங்கள் தோற்றத்தையும் ஆரோக்கியத்தையும் நீங்கள் பேணிப் பாதுகாக்கும் விதம், எல்லாம் இணைந்துதான் உங்களைப் பற்றிய எண்ணத்தை உருவாக்குகிறது.

உங்கள் இடம்:- அலுவலகச் சூழல், உங்களைப் பற்றிய அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. உங்கள் அலுவலகத்தின் ஒழுங்கு, ஆடம்பரமில்லாத அழகு, உங்கள் மேசையில் வைக்கப்பட்டிருக்கும் பொருள்களின் வரிசை, எல்லாமே, எந்த விடயத்தையும் நீங்கள் சரியாகச் செய்பவர் என்கிற அபிப்பிராயத்தை ஏற்படுத்துகிறது.

உங்கள் வெளிப்பாடு : உடலசைவுகளும், உச்சரிக்கும் வார்த்தைகளும் உங்களைப் பற்றிய அபிப்பிராயத்தை அழுத்தமாக ஏற்படுத்தக் கூடியவை. பலரும், மற்றவர்களுக்குப் புரியாத மாதிரி பேசுவதுதான் ஒரு துறையில் சிறந்து விளங்குவதாக அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் என்று கருதுகிறார்கள்.

ஆனால், ஒரு துறையில் நிபுணராக இருப்பவர் சிக்கலான விடயங்களையும், எல்லோரும் புரிந்து கொள்ளும்படி எளிதாகச் சொல்பவர்தான். எனவே, மற்றவர்களின் சிக்கல்களை எளிதாக்குபவரே மதிக்கப்படுகிறார் என்பதை மறந்துவிடாதீர்கள்.

நேரந்தவறாமை:- கடுகடு என்றிருக்கும் முகம் தான் கண்டிப்பை வெளிப்படுத்தும் என்றில்லை. நேரந் தவறாமை, சொன்ன சொல் தவறாமை போன்ற அம்சங்கள், நீங்கள் கண்டிப்பானவர் என்ற உணர்வை ஏற்படுத்தும். உங்கள் மீதான மரியாதையை மேம்படுத்தும்.

நடப்புகளை நன்கறிதல்:- உங்கள் துறையில் மட்டுமின்றி உலகில் பொதுவாக நடைபெறும் விடயங்களை ஓரளவு தெரிந்து வைத்துக் கொள்வது நல்லது. நாலும் தெரிஞ்சவர் இவர் என்கிற எண்ணத்தை ஏற்படுத்திவிட்டு ஒன்றும் தெரியாமல் இருக்கலாமா என்ன?

தெளிவாக வழிகாட்டுதல்:- ஏதேனும் ஓர் இடத்திற்குப் போக வழி கேட்டால் கூட, தனக்குத் தெரியாது என்பதை வெளிப்படுத்த விருப்பமின்றி சுற்றிவிடுகிற இயல்பு நிறைய மனிதர்களுக்கு உண்டு.

நம்மிடம் ஆலோசனை கேட்டு வருபவர்களுக்கு சரியாக வழிகாட்டுவது நம்முடைய கடமை. ஒருவேளை நமக்குத் தெரியவே தெரியாத விடயமென்றால், யாரை அணுகலாம் என்பதைத் தெளிவாகவும், துல்லியமாகவும் சொல்லி விடுவது நல்லது. இதன் மூலம் நமக்குத் தெரியாத விடயங்களில் கூட வழிகாட்டியாக விளங்க முடியும்.

நம்மை நாம் எப்படி வெளிப்படுத்துகிறோமோ அப்படித்தான் இந்த உலகம் நம்மை அறிந்து கொள்கிறது. எனவே, உலகம் உங்களை மதிக்க வேண்டுமென்றால், மதிக்கும் விதமாக உங்களை நீங்கள் வெளிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## வாழ்க்கையில் உண்மையில் முக்கியமானது என்ன தெரியுமா?



ஏழையிடம் கேட்டால் பணம் என்பான். பணக்காரனிடம்கேட்டால் ஆரோக்கியம், நேரம், நிம்மதி என்பான்.

அந்தந்த சூழ்நிலையைப் பொறுத்துதான் நமக்குஎதுமுக்கியம்என்று நாம் சொல்லமுடியும்.

இப்போது பஸ்ஸில் கால் வலிக்க நின்று போகிறவர்களிடம்போய்உனக்கு இப்போ என்ன வேணும் என்று கேட்டால் இருப்பதற்கு ஒரு சீட் வேணும் என்று சொல்லுவான். அந்தந்த சூழ்நிலையில் நமக்கு எது தேவைப்படுகிறதோ அதுதான் முக்கியம்.

மாதச் சம்பளம் வாங்கி, கடனுக்கு வட்டி கட்டி, மாதக் கடைசியில் யாரிடமாவது கை ஏந்தி நிற்கும் வெகுஜன மக்களிடத்தில் கேட்டால் பணம் தான் முக்கியம் என்று சொல்லுவார்கள்.

இதையே ஒரு தொழிலதிபர் பணக்காரனிடம் வாழ்க்கையில் எது முக்கியம் என்று கேட்டால் ஆரோக்கியம், நேரம், நிம்மதி இதுதான் முக்கியம் என்று சொல்லுவார்கள்.

எம்மிடம் எது இல்லையோ அதுதான் எமக்கு வாழ்க்கையில் முக்கியம் என்று சொல்லுவோம். பெரும்பாலும் நாம் தேடி ஓடிக்கொண்டு இருக்கும் ஒரு விடயம் அதை அடைந்த பிறகு தான் தெரியும் அது நமக்கு முக்கியம் இல்லாதது என்று.

பணம் இல்லாதவனுக்கு பணம் ஒன்றுதான் பிரச்சினை. ஆனால் பணம் இருக்கிறவனுக்கு ஆயிரம் பிரச்சினை இருக்கும் .

பெரும்பாலானவர்கள் அப்படி ஒரு நாளில் ஒரு நிமிடம் கூட ஓய்வாக இருந்திருக்க மாட்டீர்கள்.

உங்களுக்காக ஒரு அரை மணி நேரம் சும்மா உட்காருங்க. உங்களைப் பாத்து நீங்களே கேள்வி கேளுங்கள். நாம் ஏன் இதைச் செய்கிறோம்? இதுஎமக்கு தேவைதானா? இப்படி நிறைய கேள்வியை உங்களிடமே கேளுங்கள்.

என்ன கேள்வி கேட்கனுமா கேளுங்கள். இப்படி தொடர்ந்து செய்யும்போது உங்களைப் பற்றி உங்களுக்கே ஒரு புரிதல் கிடைக்கும்.

பின்னர் ஒவ்வொரு நாளும் உங்களுக்காக நீங்க செலவுசெய்யும் இந்த அரை மணி நேரம் தான் வாழ்க்கைக்கு மிகவும் முக்கியம் என்பது பின்னர் தெரியவரும்.

## தவிர்க்க வேண்டிய புள்ளிகளையும் தெரிந்து கொள்வோம்!

அனுபவங்களைத் தராமல் குருட்டாம்போக்கில் சில ஆதாயங்கள் வருவதுண்டு. அத்தனை வெற்றிகளும் அப்படி வரும் என்று நினைத்துவிடாதீர்கள்.

சில விடயங்களைத் தவிர்ப்பதால்கூட, தற்காலிகத் தோல்விகளை ஏற்பதால்கூட நிரந்தரமான வெற்றிகளை நோக்கி நாம் பயணமாகலாம்.

பயணம் போகிறபோது, பக்குவமில்லாத குறுக்குப் பாதைகளில் போவதன் மூலம் போகிற வாகனம் பழுதாவதுபோல, தவறான அணுகுமுறைகள் உங்கள் வளர்ச்சிக்குத் தடை ஏற்படுத்தக்கூடும்.

புள்ளிகளை இணைத்துக் கொண்டே போகிறபோது தவிர்க்க வேண்டிய புள்ளிகளையும் தெரிந்து கொள்வது அவசியம்.

## எப்படிப்பட்ட எண்ணங்கள் நம் வாழ்க்கையையே தொலைத்துவிடும்?

எனக்கு இரண்டு கண் போனாலும் பரவாயில்லை. அடுத்தவர்களுக்கு ஒரு கண்ணாவது போகவேண்டும் என்ற எண்ணம்.

அவன் நல்லா வாழ்கிறான். நாம் வாழமுடியலையே என்று அடுத்தவரிடம் நம்மை ஒப்பிட்டு கொண்டிருப்பது.

எல்லா விடயங்களையும் எதிர்மறை எண்ணங்களுடன் பார்ப்பது.

அடுத்தவர்களின் பார்வையிலிருந்து நமது வாழ்க்கையை செதுக்குவது.

மற்றவர்கள் கஷ்டப்பட்டால் என்ன நாம் நன்றாக வாழ்ந்தால் போதும் என நினைக்கும் எண்ணம்.

நம்மிடம் உள்ள பிழைகளை பார்க்காமல் மற்றவரை குறை கூறுவது.

உலகத்தில் இருக்கும் கஷ்டம் எல்லாம் நமக்கு மட்டும்தான் இருக்கு என்று நினைத்துக் கொள்ள வேண்டியது.

ஏதாவது வாழ்க்கையில் பிரச்சினை வந்தால் அதை எப்படி சரி செய்யலாம் என்று பார்க்காமல் நேரத்தின் மீது பழி போடுவது.

எதற்க்காக பிறந்தோம் நம்மால் யாருக்கு பயன். நாம் வாழ்வதே பயனற்றது என்று நினைப்பது மிகவும் தவறு.

மற்றவர்கள் தன்னை பற்றி கூறுவதை நம்பி தன்னை தானே தாழ்த்தி கொள்வது.

எனக்கு அப்படி நடந்துவிட்டது, இப்படி நடந்து விட்டது என்று முடிந்த விடயத்தை நினைத்து புலம்புவது.

# கத்தோலிக்கத்தையும் தமிழையும் இரு கண்களாக பேணும் கலாநிதி எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளார்

கலாநிதி சீமாம்பிள்ளை யோசவ் இம்மானுவேல் அடிகளார் 2021ஆம் ஆண்டில் 87ஆவது அகவையையும் (1934) குருத்துவப் பணியில் 54 ஆண்டுகளையும் (1966) நிறைவு செய்யும் யாழ் மறைமாவட்ட அனுபவம் மிக்க மூத்த குரு ஆவார்.

2017ஆம் ஆண்டு இவர் தாய் மண்ணிற்குத் திரும்பிய போது காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் 01 ஒக்ரோபர் 2017 இதழில் இவர் பற்றிய செய்தியை வெளியிட்டது. இப்போது அவரின் குருத்துவத்தின் 54 ஆண்டு நிறைவில் அவரை மீண்டும் கௌரவிக்கிறது.

கத்தோலிக்கத்தையும் தமிழையும் தம் இரு கண்களாகப் பேணும் கலாநிதி எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளார் ஒரு சிந்தனையாளர் – கொள்கை வகுப்பாளர் – முற்போக்காளர் – இறையியலாளர் – விரிவுரையாளர் – பேச்சாளர் – எழுத்தாளர் – தமிழ்ப்பற்றாளர் – ஆசிய ஆயர்கள் பேரவையின் இறையியல் ஆலோசகர் – எனப் பன்முக ஆளுமை கொண்டவர்.

1968ஆம் ஆண்டு கலாநிதி எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகளார் உரோமையில் குருப்பட்டம் பெற்றவுடன் எனது சில்லாலைப் பங்கிற்கு வெள்ளைக்காரக் குருவான ஸ்பொம்பத்தி அடிகளாருக்கு உதவிப் பங்குத்தந்தையாக வந்திருந்தார். ஆலயத்திற்கு அருகாமையில் இருந்த பொலிற் என்பவருடன் ஸ்பொம்பத்தி அடிகளாருக்கு ஏதோ குழ்ப்பம். சத்தம் கேட்ட எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளார் 'வட் இஸ் த மற்றர்?' என்று ஆங்கிலத்தில் கேட்டுக் கொண்டு ஓடி வந்தார். இளம் குருவானவர் – அப்போதுதான் உரோமையில் இருந்து வந்தவர் – வாயில் ஆங்கிலம்தான் வந்தது. பொலிற்று என்பவருக்கு எவ்வளவு ஆங்கிலம் தெரியும் என்று எனக்குத் தெரியாது. பொலிற்று என்பவர் 'வட் இஸ் த மற்றறோ ...?' என்று வேலியைப் பிய்த்ததுக் கொண்டு பாயந்தார். இதுவே எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளார் பற்றிய முதற் பதிவு.

1972ஆம் ஆண்டு மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தலம் எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகளாரால் கட்டி முடிக்கப்பட்டு அப்போதைய யாழ் மறைமாவட்டத்துணைஆயர் எல்.ஆர். அன்ரனி ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது. யாழ் புனித மாட்டீனார் குருமட அதிபர் ஏ.சேவியர் குறூஸ் அடிகளாரின் பணிப்பின் பேரில் மாணவராக இருந்த நாம் கால்நடையாக மானிப்பாய் திறப்பு விழாவிற்குச் சென்றோம். இது எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளார் பற்றிய இரண்டாம் பதிவு.



1982 –1983 காலப்பகுதியில் கண்டி அம்பிற்றிய தேசிய குருத்துவக் கல்லூரிக்கு இறையியல் கற்க நான் சென்ற போது அங்கு திருஅவையியல் விரிவுரையாளராக வந்தார். 1993 – 1996 காலப்பகுதியில் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் அவர் அதிபராக இருந்த காலத்தில் நிதியாளராக அவருடன் பணியாற்றினேன். அவர் ஜேர்மனி மூன்ஸ்ரர் மறைமாவட்டத்தில் பணியாற்றிய போது (1997 – 2007) எனது சகோதரி புஸ்ப்பம் அருளானந்தம் ஜெயராசா குடும்பத்தினருடன் அவர் தங்கியிருந்த ஜேர்மனி இல்லம் சென்று சில நாள்கள் தங்கினோம்.

இவரின் இந்த பசுமையான நினைவுகளுடன் இவரின் வாழ்நாள் சாதனைகளை இங்கு பதிந்து யாழ் மறைமாவட்ட சாதனைக் குருக்களில் இவர் பெயர் சரித்திர ஏடுகளில் நிச்சயம் பொறிக்கப்படும் எனக்கூறி வைக்க விரும்புகிறேன்.

**- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் -**

**(இலங்கை திறந்த பல்கலைக்கழக ஊடக வருகை விரிவுரையாளர்)**



1967 – 1971 ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் பொது நிலை மறைப்ணியாளரின் இயக்குநர் – மறையாசிரியர்களின் பொறுப்பாளர் – மறைமாவட்ட ஒன்றியத் ஆன்மீக இயக்குநர் – கத்தோலிக்க மாணவர் ஒன்றிய ஆன்மீக இயக்குநர் எனப்பல பணிகளில் பணியாற்றியுள்ளார். 1968ஆம் ஆண்டு 06 மாதங்கள் சில்லாலைப் பங்கின் உதவிப் பங்குத்தந்தையாகப் பணியாற்றி இவர் 1971 – 1972 ஆண்டு காலப்பகுதியில் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தின் பங்குத் தந்தையாகப் பணியாற்றிய போது தற்போதைய புனித அந்தோனியார் யாத்திரைத்தலத்தைக் கட்டி எழுப்பினார். தற்போது காணப்படும் போட்டிக்கோ பின்னர் ஏ.எவ். பெனட் அடிகளார் காலத்தில் கட்டப்பட்டதாகும்.

ஜேர்மனியில் மூன்ஸ்ரர் மறைமாவட்டத்தில் (1997 – 2007) பணியாற்றிய காலத்தில் பற்றிமா மாதா குறோட்டோ ஒன்றையும் ஜேர்மனியில் கட்டியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தலத்தை திறந்து வைத்தவுடன் பணிமாற்றம் செய்யப்பட்டு 1972 – 1973 ஆண்டு காலப்பகுதியில் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

1973 – 1976 ஆண்டு காலப்பகுதியில் 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் ஆசிய ஆபிரிக்க திருச்சபையில் பொதுநிலைப் மறைப்ணியாளரின் பணிபற்றி ஆய்வு செய்து உரோமையில் இறையியலில் கலாநிதிப்பட்டம் பெற்றார். இவரின் இந்த ஆய்வு முகமற்ற பொது நிலைப் பணியாளரை அடையாளங்காணுதல் என்னும் தலைப்பில் கொழும்பு லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தால் புத்தகமாக வெளியிடப்பட்டது.

1979ஆம் ஆண்டு ஆசிய ஆயர்கள் பேரவையின் ஏற்பாட்டில் கொங்கொங் மாநகரில் நடைபெற்ற பேரவையில் இவரின் கலாநிதிப்பட்ட தலைப்பில் உரையாற்ற அழைக்கப்பட்டார். இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் பிரதிநிதியாக அப்போதைய யாழ் ஆயர் மேதகு கலாநிதி வ.தியோகுப்பிள்ளை ஆண்டகையும் மேற்படி அமர்வில் கலந்து கொண்டார். இலங்கை திரும்பி கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் 1976ஆம் ஆண்டு முதல் 1986 ஆண்டு வரை இறையியல் விரிவுரையாளராகவும் இறையியல் பீடத் தலைவராகவும் பணியாற்றினார்.

ஆசிய இறையியலாளராக மதிக்கப்படும் எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளார் 1986 ஆம் ஆண்டு முதல் 1994ஆம் ஆண்டு வரை எட்டு ஆண்டுகள் ஆசிய ஆயர்கள் பேரவையின் இறையியல் ஆலோசகராகப் பணியாற்றியுள்ளார். 1986ஆம் ஆண்டு ஆசிய ஆயர் பேரவை ஜப்பான் றோக்கியோவில் நடத்திய 130 ஆயர்கள் பங்கு பற்றிய பொது அமர்விற்கு பொது நிலையினரைப் பற்றிய ஆரம்ப உரை நிகழ்த்தும்படி அழைக்கப்பட்டார்.

1986ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டுவரை யாழ் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் அதிபராகவும் இறையியல் விரிவுரையாளராகவும் யாழ் மறைமாவட்டத்தின் குருமுதல்வராகவும் பணியாற்றினார். 1986 – 1996 ஆண்டு காலப்பகுதியில் நல்லை ஆதீன முதல்வர் – அப்போதைய யாழ் ஆயர் மேதகு கலாநிதி வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை – தென் இந்திய திருச்சபை ஆயர் மேதகு கலாநிதி அம்பலவாணர் – ஒஸ்மானியா கல்லூரி அதிபர் ஆகிய நான்கு சமயத் தலைவர்களையும் போசகர்களாகக் கொண்டு நற்சமூக நடுநிலையத்தை யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்குத் தெருவில் நிறுவி இன மத ஒற்றுமைக்காகப் பணியாற்றியுள்ளார். இதே காலப் பகுதியில் 'புதிய உலகம்' என்ற யாழ் மறைமாவட்டச் சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

இன்று வரை இவர் ஜேர்மன், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் 12 புத்தகங்களை வெளியிட்டுள்ளார். இவர் தமிழ் – ஆங்கிலம் – இலத்தீன் – பிரெஞ்ச் – ஜேர்மன் – இத்தாலியன் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றுள்ளார். உரோமைக்குக் கல்வி கற்க இவர் முதல் தடவை சென்ற போது இத்தாலியன் மொழியையும் கலாசாரத்தையும் கற்பதற்கு இலங்கை தூதரகத்தின் புலமைப் பரிசில் பெற்று டிப்ளோமாப் பட்டத்தைப் பெற்றவர்.

எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளாரின் தொடர்பணி சிறக்க காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களைக் காணிக்கையாக்குகிறோம்.

காலைக்கதிர்
Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
- ஊடக விரிவுரையாளர்

## உயரிய குருத்துவப் பணியில் 54 ஆண்டுகளைத் தொடும் ஆசிய இறையியலாளர் எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகளார்

1995இல் இலங்கையின் வடபகுதியில் இடம்பெற்ற வரலாறு காணாத இடப்பெயர்வின் போது யாழ் மண்ணை விட்டு வெளியேறிய இவர் மிருசுவில் – கிளிநொச்சி – மடு என படிப்படியாக இடம் பெயர்ந்த பின்னர் 1996இல் இலங்கை நாட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

முதலில் எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளார் ஓராண்டு காலம் (1996 – 1997) இங்கிலாந்தில் லண்டன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார். பின்னர் ஜேர்மன் மூன்ஸ்ரர் மறைமாவட்டத்தில் 10 ஆண்டுகள் (1997 – 2007), ஜேர்மன் புனித நீக்கிலார் ஆலயப் பங்கில் 10 ஆண்டுகள் (2007 – 2017) என 20 ஆண்டுகள் ஜேர்மனியில் பணியாற்றினார்.

2010ஆம் ஆண்டு முதல் உலகத் தமிழர் பேரவையின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட இவர் தனது 21 ஆண்டுகால (1996 – 2017) வெளிநாட்டு சுயஇடம் பெயர்வின் போது ஐரோப்பாவிலும் லண்டன் – பிறான்ங்பேட் – முன்ஸ்ரர் பல்கலைக்கழகங்களில் ஆசிய இறையியலாளராக கற்பிக்க அழைக்கப்பட்டார். அப்பொழுது அவர்களுடன் தனது ஆசிய இறையியல் அனுபவங்கள் மற்றும் சிந்தனைகளை ஆங்கிலத்திலும் ஜேர்மன் மொழியிலும் பகிர்ந்து கொண்டு அச்சிந்தனைகளைச் சில சஞ்சிகைகளிலும் எழுதியுள்ளார்.

இக்காலப்பகுதியில் இவர் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் அற்ற அவல வாழ்வை பன்னாட்டு அரங்கில் பகிரங்கமாக அறிவித்து தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் எல்லா நாடுகளுக்கும் குறிப்பாக 26 நகரங்களுக்குச் சென்று பரப்புரைகளையும் மேற்கொண்டார். 2017ஆம் ஆண்டு இலங்கை நல்லாட்சி அரசின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் அழைப்பை ஏற்றுத் தாய் மண்ணிற்குத் திரும்பினார்.

1934ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்த எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளார்



1958இல் கொழும்பில் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தைப் பெற்று விஞ்ஞானபாட ஆசிரியராகக் கரவெட்டி திரு இருதயக் கல்லூரி – மன்னார் – யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி ஆகிய இடங்களில் பணியாற்றியுள்ளார். 1958 – 1961 காலப்பகுதியில் இவர் கொழும்பு லேக்கவுஸ் பத்திரிகை நிறுவனத்தில் ஊடகவியலாளராக பணியாற்றியுள்ளார்.

புனித மாட்டீனார் சிறிய குருமடத்தில் சில மாதங்கள் ,லத்தீன் மொழியைக் கற்ற இவர் கண்டி அம்பிற்றிய தேசிய குருமடத்தில் முதலாம் ஆண்டு மெய்யியல் கல்வியை முடித்துக் கொண்டு 1962 – 1967 காலப்பகுதியில் உரோமை உர்பாணியானா பல்கலைக்கழகத்தில் மெய்யியல் மற்றும் இறையியல் கல்வியை நிறைவு செய்து இறையியல் முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்றார்.

இவரின் உரோமைக் குருத்துவப் பயிற்சிக்காலத்தில் (1962 – 1967) இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பார்வையாளராகப் பங்குபற்றி அதன் முக்கிய இறையியலாளர்களான கால் இறாணர் – ஜவிஸ் கொங்கார் – எட்வேட் ஸ்கெலபெக்ஸ் – கான்ஸ் குங் போன்றவர்களின் உரைகளை நேரடியாகக் கேட்டு வத்திக்கான் சங்க அமர்வுகளை ஜயம்திரிபறக் கரைத்துக் குடித்தவர். திருத்தந்தையாக தெரிவு செய்யப்பட பெயரிடப்பட்ட கருதினால்களில் ஒருவரான கருதினால் அகஜேவயின் அவர்களால் 1966ஆம் ஆண்டு டிசெம்பரில் உரோம் புனித பேதுருவானவர் பேராலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

# பிரஜாவுரிமையை அரசு நீக்கினாலும் வாழ்வின் எல்லைவரை போராடுவோம்!

## ஜே.வி.பி. சபதம்



ஜனநாயகத்துக்கான போராட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் குரலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் முடக்க முடியாது. பிரஜாவுரிமையை நீக்கினாலும் எம்மை சிறை யிலடைத்தாலும் வாழ்வின் இறுதி வரை எமது போராட்டம் தொடரும் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனநாயக ரீதியாகச் செயற்படுகின்றவர்க ளுக்கு எதிராகவும் அவர்களுக்கு சவால் விடுக் கும்வகையிலும்ஜனாதிபதிநந்தசேனகோட்டாபய ராஜபக்ஷவால் விசித்திரமான ஆணைக்குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளது. எமது குடும்பம் சார்ந்த மோசடிகளில் யாரும் தலையிடாதீர்கள் என்றுஎச்சரிக்கும்வகையிலேயே இந்த ஆணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான எமது குரலை முடக்குவதற்கு முயற்சித்தால் வாழ்நாளின் இறுதிவரை அதனை எதிர்த்து போராட நாம் தயாராகவுள்ளோம் என ஜனாதிபதியிடம் கூறிக் கொள்கின்றோம்.

எமது குரலை ஒடுக்கும் போராட்டத்தில் கோட் டாபய ராஜபக்ஷவால் வெற்றி பெற முடியாது. அவரை நாம் தோற்கடிப்போம். பிரஜாவுரி மையைநீக்கினாலும்எமதுபோராட்டம்தொடரும். ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் போராட்டத்தில் பிரஜாவுரிமை எமக்குப் பெரிதல்ல. 1983 இல் ஜே.ஆர்.ஜெயவர்தன மக்கள் விடுதலை முன்ன ணியின் பிரஜாவுரிமையை நீக்கினார். ஆனால் எமது செயற்பாடுகளை அவராலும் முடக்க முடியவில்லை.

அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதி பதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க உள்ளிட்ட 22 பேரின் பிரஜாவுரிமையை நீக்குமாறு கூறப்பட்டுள்ளது. கோட்டாபய ராஜபக்ஷவிற்கு வேறு என்ன செய்வ தென்று புரியாமல் இவ்வாறு செய்ய முற் படுகின்றார். அவருக்கு நாட்டை நிர்வகிக்கத் தெரியவில்லை. தமது இயலாமையை அவர்கள் புரிந்து கொள்ளும் போது, உண்மையை வெளிப்படுத்தும் அரசியல்வாதிகளின் குரலை முடக்க முயற்சிக்கிறார்கள்.

ஜனநாயக போராட்டத்தில் ராஜபக்ஷாக்களின் 69 லட்சம் வாக்குகளா அல்லது மக்கள் விடுதலை முன்னணி, தேசிய மக்கள் சக்தியின் கூட்டு பலமா வெற்றி பெறுகிறது என்பதை பொறுத்தி ருந்து பார்க்க வேண்டும். பிரஜாவுரிமையை நீக்கியல்ல, சிறையிலடைத்தாலும் ஜனநாயகத்துக் கான எமது குரலை முடக்க முடியாது. –என்றார்.

## இலஞ்சம், ஊழலை தடுக்க நடவடிக்கை!

திணைக்களங்கள் மற் றும் கூட்டுத்தாபனங்கள் போன்ற அரச நிறுவனங்க ளில் லஞ்சம் பெறுபவர் களை உடனடியாகக் கைது செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும் கொழும்பு மற் றும் கொழும்பைச் சூழவுள்ள அரச நிறுவனங்களில் மட்டு மல்லாது நாட்டின் அனைத்து பிரதேசங்களையும் உள்ள டக்கிய வகையில் இந்த நடவ டிக்கைகளை மேற்கொள் வதாக லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் விசாரணைப் பிரிவு பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பத்மினி வீர சூரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன் லஞ்சம் மற் றும் ஊழலுக்கு எதிராக மக் கள் செயற்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

## மோ. சைக்கிள் விபத்தில் இளம் குடும்பஸ்தர் சாவு!

யாழ்., பருத்தித்துறை – திக்கம் சந்திக்கு அண்மை யில் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகி கடலுக் குள் பாய்ந்ததால் அதில் பய ணித்தவர் சாவடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற் றிரவு இடம்பெற்றுள்ளது என ஆரம்பகட்ட விசாரணைக ளின் பின்னர் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் கற்கோவ ளத்தைச் சேர்ந்த பவிதரன் (வயது–30) என்ற இளம் குடும் பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

நேற்று காலை அந்த வீதி யூடாகப் பயணித்தவர்கள் பருத்தித்துறை பொலிஸா ருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் அங்கு வந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.


### ஒடியல் மா தேவை
ஒடியல் மா மொத்தமாக கொள்வனவிற்கு தேவை.
தொடர்புகளுக்கு 076 403 814

### பனங்கிழங்கு தேவை
பனங்கிழங்கு மொத்த கொள்வனவுக்கு தேவை.
தொடர்புகளுக்கு 076 011 7002

### வீடு வாடகைக்குத் தேவை
சிறிய கைத்தொழில் நிறுவனத் திற்கு வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு 071 777 7559

### பாக்கு, கமுக மட்டை தேவை
குடில் உற்பத்திகள் நிறுவனமா னது பாக்கு, கமுக மட்டைகளை மொத்தமாக கொள்வனவு செய்கிறது. கமுகு மட்டைகள் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.
குறிப்பு:- உடனடியாக பணம் கொடுத்து வாங்கப்படும்.
தொடர்புகளுக்கு 076 011 7002

### பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை
நாவற்குழியில் இயங்கும் தனியார் நிறுவனத்திற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு 076 740 3814

### HOUSE FOR RENT
Address:
Temple Road, Jaffna.
Contact:-0779791957

### வீட்டுப் பணியாட்கள் தேவை
ஆண், பெண் இருபாலாரும்.
தொடர்புகளுக்கு 077 435 0737

### மணமகள் தேவை
இலங்கையில் SLAS பதவியிலுள்ள 43 வயது மூல நட்சத்திர 12 இல் செவ்வாய் உள்ள வேளாளர் குல மண மகனுக்கு தகுந்த மணமகளையும் (அரச தொழில்) எதிர்பார்க்கிறோம்.
தொடர்புகளுக்கு 077 650 5097
021 222 1515
0014166661855

### மணமகன் தேவை
இலங்கையில் வைத்தியராக தொழில் புரியும் 34 வயது கார்த்திகை 2 ஆம் பாத நட்சத்திர வேளாளர்குல மணமகளுக்கு அரச பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு 077 650 5097
021 222 1515
0014166661855

### மணமகள் தேவை
பிறந்த திகதி – 31.12.1987
மதம் – இந்து N
நட்சத்திரம் – கார்த்திகை 2 ஆம் பாதம்
பாவம் – 16
தொழில் – காவல்துறை உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு – அழகான பெண், அரச உத்தியோகம் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு 077 1654 744

### மணமகன் தேவை
பிறந்த திகதி – 29.09.1992
மதம் – இந்து N
நட்சத்திரம் – சுவாதி 3 ஆம் பாதம்
செவ் – 12
பாவம் – 14
கல்வி – A/L
எதிர்பார்ப்பு – அரச உத்தியோகம்.
தொடர்புகளுக்கு 077 1654 744

### பழுது பார்த்து கொடுக்கப்படும்
சகல வகையான குளிர்சாதன பெட்டிகளும் பழுது பார்த்து கொடுக்கப்படும்
தொடர்புகளுக்கு 077 654 8613

### மஞ்சள் கன்று விற்பனைக்கு
1 1/2 மாத மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு எடுத்து வந்து தரப்படும்.
தொடர்புகளுக்கு 021 492 7778

### இஞ்சி கன்று விற்பனைக்கு
தரமான இஞ்சி கன்று விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு 021 492 7778

### லை டன் புடவை நிலையம்
பாடசாலை சீருடைகள், வைத்தி யசாலை சீருடைகள் போன்ற சகல விதமான துணி வகைகள் மற்றும் புடவை வகைகள் மலிவான விலைக்கு சிறந்த தரத்துடன் விற்பனை செய்யப்படும்.
தொடர்புகளுக்கு 021 222 2381

### சன் நிதி முருகன் வேக் சொப் சேவிஸ் ஸ்டேசன் (புட்சிற்றி)
சந்நிதி முருகன் உதிரிப்பாகங்கள் And புட்சிற்றி
தொடர்புகளுக்கு 021 222 5207
102, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

### திருமண சேவை
எங்கள் திருமண சேவையில் 1970 தொடக்கம் 1998 வரை அரச சேவை, தனியார், மணமகன், மணமகள் குறிப்புக்கள் உண்டு. சகல இனத்தவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு 077 197 1667
077 3164 796

### வேலை வாய்ப்பு
பாடசாலை கல்வியை முடித்த மாணவிகளுக்கு வேலை வாய்ப்பு.
தொடர்புகளுக்கு 077 307 8799

### காணி விற்பனைக்கு
01. நல்லூர் செட்டித்தெருவில் 2 பரப்பு காணி.
02. பண்ணை பால் நிலைய முன் பக்கத்தில் 10 பரப்புக் காணி.
03. கே.கே.எஸ். வீதி, தெல்லிப்பளை யில் 60 பரப்புக் காணி.
04. யாழ் பந்தப்பு சேகரம் வீதியில் 10 பரப்புக் காணி
05. கே.கே.எஸ் வீதியில் நக்கீரர் கோயிலுக்கு அருகாமையில் 10 பரப்பு.
076 885 9925
077 857 8528

### வாடகைக்கு உண்டு
கிளிநொச்சி கண்ணன் கோவிலுக்கு பின்பக்கமாக சகல வசதிகளுடனும் கூடிய வீடும், மற்றும் முருகேசு கட்டடம் A9 வீதியில் கரடிப்போக்கு கிளிநொச்சியில் 2 கடைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு 077 857 8528

Laptop உதிரிப்பாகங்கள் பெற்றுக்கொள்ளவும் பாவித்த Lap வாங்க, விற்க மற்றும் எலக்ரோனிக் உபகரணங்களும் திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு 077 914 7472

### துஷா பல் மூக்குக் கண்ணாடியகம்
* இலவச கண் பரிசோதனை
* கொம்பியூட்டர் மூலம் கண் பரி சோதித்து குறுகிய நேரத்தில் மூக்குக் கண்ணாடியைப் பெற் றுக் கொள்ள முடியும்.
* பல் கட்டுதல்
* மிதப்புப் பற்களுக்கு கிளிப்புப் போடுதல்.
குறைந்த விலையில் பெற்றுப் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு 021 222 3461
544, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

மகிந்திரா Kuv 100 6+ மினி.எஸ்.யு.வி. பதிவுகளுக்கு அணுகவும்.
தொடர்புகளுக்கு 0777 363226

சி.சி.ரீ.வி கமரா பொருத்துதல், பராமரித்தல் மற்றும் முதற்தர கமராக்களை வாங்குவதற்கு அணுகவும்.
தொடர்புகளுக்கு 077 473 6057

### சண் மால் Food City
கொள்வனவு செய்யும் அனைத்து பொருட்களுக்கும் விலைக் கழிவு உண்டு.
குறிப்பாக:- Diva Soap 3 இற்கு Velvette 3இற்கு ஒன்று இலவசம். Life Bouy Soap மூன்றிற்கு ஒன்று இலவசம்.
சிறிய பிள்ளைகளின் Toys Discount உண்டு. பால்மா வகை களுக்கு நெஸ்ரமோட், அங்கர் பால்மா வகைகளுக்கு விலைக்கழிவு உண்டு.

60 ஆண்டு சேவையில் திருமண உலகில் 3 ஆம் தலைமுறைகண்ட பெருமைக்குரிய,
### சர்வதேவ புலவர் திருமண சேவை
பெற்றோர்களுக்கு, பிள்ளைகளுக்கு, பேரப்பிள்ளைகளுக்கு என மூன்று தலை முறைக்கும், திருமணங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் புலவர் சேவையுடன் தொடர்பு கொண்டு நீங்கள் எதிர்பார்க்கும் மணமகன், மகளைத் தேர்ந்தெடுத்து உள்நாட்டு, வெளிநாட்டுத் திருமணங்களை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.
238, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 7147, 077 573 7301
076 887 8370

### வீடு, காணி விற்பனைக்கு
* கோவில் வீதி, முடமாவடியில் காணி விற்பனைக்கு 1.5 பரப்பு.
* உடுவில் காணி விற்பனைக்கு – 4 பரப்பு
* நுணாவில் சாவகச்சேரியில் காணி விற்பனைக்கு 14 பரப்பு 12.53 குழி
* வசாவிளானில் வீதி முனப்பாக காணி விற்பனைக்கு – 15 பரப்பு
* உரும்பிராயில் காணி விற்பனைக்கு – 3 பரப்பு 10 குழி
* நாவற்குழியில் வீடு விற்பனைக்கு – 1.5 பரப்பு
* மானிப்பாயில் கடை விற்பனைக்கு – 5.6 குழி
* ஈவினையில் காணி விற்பனைக்கு – 9 பரப்பு 7 குழி.
Relmax North Realty
தொடர்புகளுக்கு 077 566 0000

### எவர்கிறீன் பதிப்பகத்தில் பணியாற்றுவதற்கு
01. இரவு நேரப் பாதுகாப்பு உத்தியோகத்தராக பணியாற்று வதற்கும்.
02. பதிப்பகத்தில் உள்ளகத்தில் துப்புரவு செய்வதற்கும்.
03. கொம்பியூட்டர் ரைப்பிங் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.
#693. K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு 0777 141 444

# ‘கையெழுத்துப் பூக்கள்’ – கண்காட்சி






கே.எஸ்.சிவஞானராஜாவின் ‘கையெழுத்துப் பூக்கள்’ கண்காட்சி நேற்றும் இன்றும் யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியில் உள்ள அறிவாலயத்தில் காலை 9.30மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறுகின்றது.

கே.எஸ்.சிவஞானராஜா மணி, மணியான எழுத்துக்களில் வரைந்த சுமார் மூவாயிரம் ஆக்கங்கள் – கதை, கட்டுரை, கவிதை, செய்தித் துளிகள், விமர்சனங்கள் – இந்தக் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

இது, எழுத்துக்களினால் உலகாளும் ஒரு விழிப்புணர்வுக் கண்காட்சியாகும்.




## லக்ஷ்மி நாராயணா திருமண சேவை

இல:- 266 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 197 1667
077 316 4796

### மணமகன் விவரம்

பிறந்த திகதி – 1987.12.09 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – புனர்பூசம் 4
கி.பா – 12 செவ் – 02 இல்
தகைமை – AL தொழில் – France PR
எதிர்பார்ப்பு – படித்த வெளிநாடு செல்ல விரும்புபவர் + France PRமணமகள்.

பிறந்த திகதி – 1987.01.07 மதம் – இந்து
ஜாதி – K ஆண் நட்சத்திரம் – ரேவதி
கி.பா – 6,5 செவ் – 8 இல்
தகைமை – HNDA, B.com தொழில் – அரச சேவை
எதிர்பார்ப்பு – படித்த அரச சேவை மணமகள் தேவை.

பிறந்த திகதி –1989.06.16 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – விசாகம் 1
கி.பா – 15 செவ் – 5 இல்
தகைமை – M.B.B.S தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1995.03.11 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – திருவாதிரை
கி.பா – 71 செவ் – 1 இல்
தகைமை – B.sc M.sc. I.T தொழில் – அரச சேவை கொழும்பு
எதிர்பார்ப்பு – பட்டதாரி அரச சேவை கொழும்பில் வேலை மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1992.01.23 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் –பூரம் 2
கி.பா – 15 செவ் – 10இல்
தகைமை – M.B.B.S தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1991.11.13 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – உத்தராடம் 4
கி.பா – 13 செவ்/சூரி – 02 இல்
தகைமை – I.T.Software Engineer
தொழில் – Company Colombo
எதிர்பார்ப்பு – பட்டதாரி கொழும்பு வேலை மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1986.09.04 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – பூரம் 2
கி.பா – 46 செவ் – 01 இல்
தகைமை – AL
தொழில் – German PR
எதிர்பார்ப்பு – AL படித்த German or இலங்கை மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1983.07.26 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – அவிட்டம் 1
கி.பா – 37 செவ் – 07 இல்
தகைமை – AL தொழில் –Book Binder அரச சேவை
எதிர்பார்ப்பு – அரச சேவை மணமகள் தேவை.

### மணமகள் விவரம்

பிறந்த திகதி – 1991.03.05 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – சுவாதி
கி.பா – 33 செவ் – 07 இல்
தகைமை – Business Managment தொழில் – Bank Officer
எதிர்பார்ப்பு – Eng, Bank அரச உயர் பதவி மணமகன்.

பிறந்த திகதி – 1996.01.14 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – சித்திரை 3
கி.பா – 35 செவ் – 01 இல்
தகைமை – M.B.B.S. தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor or Engineer UK இலங்கை Doctor தேவை.

பிறந்த திகதி – 1985.08.07 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – அச்சுவினி
கி.பா – 35 சூரி/செவ் – 05 இல்
தகைமை – M.B.B.S தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor or Engineer மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1995.08.20 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – மிருகசீரிடம் 2
கி.பா – 08 செவ் – 10 இல்
தகைமை – B.A, ACCA தொழில் – UK Company
எதிர்பார்ப்பு – Engineer or Doctor மணமகன்.

பிறந்த திகதி – 1991.05.16 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – மிருகசீரிடம்
கி.பா – 22 செவ் – 10 இல்
தகைமை – M.B.B.S UK Campus தொழில் – UK (Citizen)
எதிர்பார்ப்பு – Doctor உயர் படிப்பு மணமகன். (UK or இலங்கை)

பிறந்த திகதி – 1993.03.22 மதம் – இந்து
ஜாதி – V சைவம் நட்சத்திரம் – பூரட்டாதி 3
கி.பா – 18 செவ் – 12 இல்
தகைமை – கல்வியியல் கல்லூரி
தொழில் – ஆசிரியர்
எதிர்பார்ப்பு – அரச சேவை + வெளிநாடு மணமகன்.

பிறந்த திகதி – 1984.11.08 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – பரணி 2
செவ்– 01 இல் கி.பா – 55
தகைமை – A.A.T, HNDA தொழில் –Accountant colombo
எதிர்பார்ப்பு – அரச சேவை தனியார் மணமகன் கொழும்பில் தேவை.

பிறந்த திகதி – 1991.03.05 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – சுவாதி
கி.பா – 33 செவ் – 07 இல்
தகைமை – Business Management
தொழில் – (Banks Staff) அரச சேவை
எதிர்பார்ப்பு – Engineer அரச உயர் பதவி மணமகன் (பரணி உத்தரம், விசாகம், கேட்டை, பூராடம்.)

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காலைக்கதிர் தொலைபேசி
021 222 3000

# திருமலை எண்ணெய் தாங்கி விவகாரம்: இந்திய – இலங்கை அறிவிப்பு முரண்!

## கனிய எண்ணெய் கூட்டுத்தாபனம் அதிருப்தி



திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை வெகுவிரைவில் இலங்கை வசமாக்குவதாக மின் சக்தி வலு அமைச்சர் குறிப்பிட்ட கருத்துக்கும் இந்திய உயர் தூதரகம் குறிப்பிட்டுள்ள கருத்துக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன என கனிய எண்ணெய் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவை சங்கத்தின் தலைவர் ஆனந்த பாலித குறிப்பிட்டார்.

திருகோணமலை எண்ணெய் தாங்கி விவகாரம் தொடர்பாக ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில் –

திருகோணமலை துறைமுகத்துக்கு சொந்தமான காணியில் 99 எண்ணெய் தாங்கிகள் காணப்படுகின்றன. இவற்றில் 15 தாங்கிகள் இந்திய எண்ணெய் நிறுவனத்தின் வசம் உள்ளன. மிகுதி 84 தாங்கிகள் ஒப்பந்த அடிப்படையில் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளன. .

செய்துகொள்ளப்பட்டுள்ள ஒப்பந்த அடிப்படையில் 2035 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எண்ணெய் தாங்கிகள் இலங்கை வசமாக வேண்டும். இதனால் திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் இந்திய நிறுவனத்தால் எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு அபிவிருத்தி செய்யப்படவில்லை.

கனிய வள கூட்டுத்தாபனம் இரண்டு அரச வங்கிகளுக்கு 6 ஆயிரம் கோடி ரூபா கடன் செலுத்த வேண்டும். அத்துடன் வெளிநாட்டு கடன் 150 கோடி டொலர் காணப்படுகிறது. கூட்டுத்தாபனம் இரண்டு அரச வங்கிகளுக்கும் வட்டி செலுத்த வேண்டும். இவ்வாறான நெருக்கடியில் பிற நிறுவனங்களிடமிருந்து கடன் பெற முடியாத நிலை கூட்டுத்தாபனத்துக்குக் காணப்படுகிறது.

நட்டமடைந்துள்ள கனிய வள கூட்டுத்தாபனம் திருகோணமலை எண்ணெய் தாங்கியை முழுமையாக அபிவிருத்தி செய்யும் என்று அரசாங்கம் குறிப்பிடுகின்றமை நகைப்புக்குரிய விடயமாகும்.

திருகோணமலை எண்ணெய் தாங்கி தொடர்பில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் 2035ஆம் ஆண்டுடன் முடிவடையும்.

இவ்வாறான நிலையில் தற்போது வெகுவிரைவில் தாங்கிகள் இலங்கை வசமாகும் என்று குறிப்பிடுகின்றமை மக்களின் அரசியல் சிந்தனையைத் திசைத்திருப்பும் செயற்பாடு என்று குறிப்பிட வேண்டும்.

எண்ணெய் தாங்கி தொடர்பாக சக்தி வலு அமைச்சர் உதய கம்மன்பில குறிப்பிட்ட கருத்துக்கும் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் குறிப்பிட்ட கருத்துக்கும் இடையில் பரஸ்பர வேறுப்பாடு காணப்படுகிறது.

எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. பேச்சு மாத்திரம் இடம்பெற்றுள்ளது என்றே இந்திய உயர் தூதரகம் குறிப்பிட்டுள்ளார். ஆகவே, இந்த விடயத்தின் உண்மை தன்மையை அரசாங்கம் அறிவிக்க வேண்டும். – என்றார்.

# நெடுமாறனுக்காக நல்லூரில் பூசை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,பெப்.21

பழ.நெடுமாறன் குணமடைய வேண்டி இன்றைய தினம் நல்லூரில் அமைந்துள்ள ஆலயம் ஒன்றில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளது.

தமிழகத்தில் உள்ள தலைவர்களில் ஈழத் தமிழர்கள் மீது மிகவும் கரிசனை கொண்ட தலைவர்களில் ஒருவரான பழ.நெடுமாறன் கொரோனாத் தொற்றுடன் நோய் வாய்ப்பாட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் குணமடைய வேண்டியே இந்த விசேட வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிவசேனை அமைப்பின் தலைவரான மறவன் புலவு சச்சிதானந்தத்தின் ஏற்பாட்டிலேயே இந்த விசேட பூசை வழிபாடு இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை சுற்றுலாத்துறையின் அடுத்த கட்ட நகர்வு இனிமேல் அனைத்து பதிவுகளும் நிகழ்நிலையில்!

இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் ஏற்பாட்டில் விருந்தினர் விடுதிகள், உணவக விடுதிகள், தங்குமிட விடுதிகள் போன்றவற்றை நிகழ்நிலை (ஒன்லைன்) மூலம் பதிவிடல் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் விளக்கமளிக்கும் கருத்தமர்வு ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள திண்ணை விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் மற்றும் திணைக்கள அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இயங்குகின்ற விடுதிகளின் உரிமையாளர்கள், பங்குதாரர்கள் போன்றோர் கலந்து கொண்டனர்.

நாட்டில் நிலவுகின்ற கொவிட் -19 சூழ்நிலையில் இங்கு வருகின்ற சுற்றுலா பணிகளுக்கு எவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றமை தொடர்பிலும், அவர்களது 14



நாள்கள் தனிமைப்படுத்தலில் சுகாதார நடைமுறைகளுடன் நடந்து கொள்வது தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டதுடன், நிகழ்நிலை மூலமாக எவ்வாறு விண்ணப்பிப்பது, நடைமுறைகள் தொடர்பிலும் அறிவுறுத்தப்பட்டது.

## பொலிஸ் அதிகாரி கைதானார்

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானை வரவேற்பதற்கான ஒத்திகை நிகழ்வுகள் நேற்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, ரி -56 ரகத் துப்பாக்கி ரவைகளை விமானநிலையத்தினுள் எடுத்துச்செல்ல முயற்சித்த பொலிஸ் அதிகாரி ஒருவர் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலையத்தின் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டுள்ளப் பொலிஸ் அதிகாரி மார்ச் முதலாம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# சீனாவின் காலணித்துவ நாடாக இலங்கை மாறும் அபாயம்!

### கலையரசன் எச்சரிக்கை

சீனாவின் காலணித்துவ நாடாக அரசாங்கம் இலங்கையை மாற்றி வருகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இது பாரிய ஆபத்தை இலங்கைக்கு ஏற்படுத்தும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியில் கலந்துகொண்டமை தொடர்பாக அம்பாறையில் கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸார் அவரிடம் வாக்குமூலம் பெற்றதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரணி தொடர்பாக என்னிடம் வாய்மொழி மூல முறைப்பாட்டை பொலிஸார் பெற்றுச் சென்றுள்ளனர்.

இந்த நாட்டில் ஜனநாயகம் நிலைத்திருக்க வேண்டும் என்ற அடிப்படையிலும், தமிழ் சமூகத்தின் கலை, கலாசார விடயங்கள் மீதான தற்போதைய திட்டமிடல்களை எதிர்த்தும் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள், சிவில் அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்ட உணர்வுடனான உரிமைப் பேரெழுச்சியாகவே இந்தப் போராட்டத்தைப் பார்க்கின்றேன்.

தங்களுடைய பூர்வீக நிலங்களில் நிம்மதியாக வாழ விட வேண்டும் என்பதை உணர்வு பூர்வமாகத் தமிழ் மக்கள் சொல்லியிருக்கிறார்கள். இதனை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த நாட்டில் ஜனநாயகம், சுதந்திரம் குறித்துப் பேசுகின்றனர். ஆனால், சிறுபான்மை சமூகமாகவுள்ள எங்களுக்கு நீதி, சுதந்திரம் கிடைக்கபெறுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது. எங்கு சென்றாலும் தமிழர்கள் தமிழ் பேசும் இனம் என்ற அடிப்படையில் தொடரும் அரசுகளால் நசுக்கப்படுகின்ற சூழல்தான் இருக்கின்றது. இந்த நிலை மாறவேண்டும்.

இந்த நாட்டின் தலைவர் அனைத்து மக்களுக்குமான தலைவர் என்பதை மறந்து பௌத்த மக்களுக்குத்தான் தலைவர் என்ற வகையில் பௌத்த தேரர்களின் சொற்படியே ஆட்சி செய்வேன் என்ற வகையில் ஜனாதிபதி கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அரசியல், அபிவிருத்தி, தொழில்வாய்ப்பு போன்ற விடயங்களில் வேறுபட்ட சிந்தனையுடன்தான் செயற்படுகின்றனர். நிலையான சமாதானத்தை ஏற்படுத்த இந்த அரசாங்கம் எந்த முன்னெடுப்புக்களையும் செய்யவில்லை.

தமிழர்களின் நீண்டகாலப் பிரச்சினைகளில் அரசாங்கம் எந்தவொரு தீர்வை நோக்கியும் நகரவில்லை என்பதை இந்தியா அடிக்கடி சுட்டிக்காட்டுவதால் இப்போது இந்தியாவையும் இலங்கை அரசாங்கம் வஞ்சித்துள்ளது.

இலங்கையில் தற்போது சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. குறிப்பாக, கொழும்புத் துறைமுகம், யாழ். தீவகப் பகுதிகளைக் கூட சீன அரசுக்கு தாரை வார்த்திருக்கும் விடயம் இந்த நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டு செல்லும்.

ஏனென்றால், இந்தியா நேச நாடு. யுத்த காலத்தில் இந்தியா இலங்கைக்கு உதவிகளை வழங்கியிருந்தாலும் சீனா மிக மோசமான ஆயுதங்களை வழங்கியது.

இப்போது, சீன மொழி பொறிக்கப்பட்ட விளம்பரப் பலகைகள் கூட காட்சிப்படுத்தப் படுகின்றன. சீன ஆதிக்கத்துக்கு உட்பட்ட காலணித்துவ நாடாக இலங்கை மாறி வருகின்றது. இது பாரிய ஆபத்தை இலங்கைக்கு ஏற்படுத்தும்' என்று தெரிவித்தார்.

# பேரணியில் கலந்தோர் மீது நடவடிக்கை ஜனநாயக இடைவெளியை அதிகரிக்கும்!

### மக்கள் பேரெழுச்சி இயக்கம் கண்டனம்

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சி பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பொலிஸார் விசாரணை செய்யும் நடவடிக்கைளுக்கு பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக பேரெழுச்சி இயக்கத்தினர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரை மக்கள் எழுச்சி போராட்டம் ஒன்று அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மற்றும் ஏற்பாட்டாளர்களை பொலிஸார் பல்வேறு காரணங்களை கூறி விசாரணைக்கு அழைக்கிறார்கள். அதனால் பல அசௌகரியங்களுக்கு மக்கள் உள்ளாகிறார்கள்.

பொதுமக்கள், மதகுருக்கள், கட்சி பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என அனைவருக்கும் பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி விசாரணைக்கு அழைக்கிறார்கள். இந்தச் செயற்பாடுகள் இந்த நாட்டில் ஜனநாயக இடைவெளியை மேலும் அதிகமாக்கும்.

இந்த பேரணி வன்முறைகள் எதுவும் இன்றி மிக ஒழுக்கமாக அஹிம்சை ரீதியில் இடம்பெற்றது. எனவே, நாட்டின் குடிமக்களாக நாமும் சுதந்திரமாக வாழ இந்த நாட்டில் பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் வழிசெய்ய வேண்டும். - எனக் குறிப்பிட்டுள்ளனர்.




## கொலையாளிகளைப்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

குழுக்களிடையே இலங்கை சம்பந்தமாக கையளிக்கப்பட்ட 'சீரோ' வரைவை பார்த்தீர்களா? அதுபற்றிய உங்களுடைய அபிப்பிராயம் என்ன?

பதில்:- ஆம். பிரதி ஒன்று மின்னஞ்சலில் எனக்கு அனுப்பப்பட்டது. குறித்த வரைவானது குறைபாடு உள்ளதாகவும் ஏமாற்றம் தருவதாகவும் இருக்கின்றது. அதுவும் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் காரியாலயத்தினதும் உயர் ஸ்தானிகர் பச்சலெட் அவர்களினதும் சிபாரிசுகளுக்குக் குறைவாகக் குறித்த வரைவு காணப்படுவது மிகவும் மன வேதனை அளிக்கின்றது. குறித்த வரைவு 30/1 தீர்மானத்தின் படிநிலைக்குக் கூட குறைவாக இருக்கின்றது. அத் தீர்மானமோ அதனுடைய குறைபாடுகளால் தான் தோல்வியடைந்தது. தமிழ் மக்களுக்குத் தேவையானதும் சர்வதேச சமூகம் எதிர்பார்ப்பதுமான குறிக்கோள்கள் சம்பந்தமாகப் பார்க்கும் போது இவ்வாறான ஒரு வரைவு இலங்கை அரசாங்கத்திற்கு முரணான ஒரு கருத்தைக் கொண்டு செல்வதாக அமைகின்றது. தாமதம் அடையும் நீதி மறுக்கப்பட்ட நீதியாகும். ஏற்கனவே ஆறு வருடங்கள் சென்று விட்டன. இலங்கை அரசாங்கம் தான் செய்வதாகக் கூறியவற்றில் எதனையும் மனமுவந்து செய்யவில்லை.

இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் உள்ளகக் குழுவானது வெகுஜன கொலையாளிகளையும் கற்பழிப்பாளர்களையும் பாதுகாக்கும் வண்ணம் இவ்வாறான ஒரு வரைவைத் தயாரித்தமை மன வேதனையையும் அதிர்ச்சியையும் அளிக்கின்றது. இலங்கை அரசாங்கத் தலைவர்கள் இது கண்டு விருந்துகளிலும் களியாட்டங்களிலும் ஈடுபடுவார்கள். இவ்வாறான வரைவானது போர்க் குற்றங்களையும் மனிதத்திற்கெதிரான குற்றங்களையும் இனப்படுகொலைகளையும் எந்தவிதப் பயமும் இன்றி இயற்றலாம் என்ற ஒரு கருத்தை உலகளாவிய அரசாங்கங்களுக்குக் கொடுப்பதாக அமையும். மனித உரிமைகள் சம்பந்தமாகவும் அடிப்படை நன்நடத்தை சம்பந்தமாகவும் கவனம் செலுத்தும் யாவருக்கும் இவ்வாறான ஒரு வரைவு மன வேதனையை அளிக்கும். பிரிட்டன், கனடா, ஜேர்மனி, மொன்டிநீக்குறோ, மசிடோனியா வடக்கு ஆகிய உள்ளகக் குழு அங்கத்துவ நாடுகளின் தலைவர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும். இவ்வாறான வரைவுகள் ஐக்கிய நாடுகளின் வருங்காலத்திற்கு நன்மை பயக்காது என்பதை நாம் உணர வேண்டும்.

அதேநேரம் இலங்கையின் வடக்கு, கிழக்கில் இருந்தும் உலக நாடுகளில் இருந்தும் நடைபெற்ற பொத்துவில் - பொலிகண்டி பேரணிகள் தமிழ் மக்களிடையே மதிப்பு மிக்க அரசியல் தீர்வொன்றைக் கொண்டு வர வேண்டும் என்பதில் புது வேகத்தையும் ஐக்கியத்தையும் வெளிப்படுத்தியுள்ளதைக் காணுகின்றோம். புதியதொரு தீர்மானமானது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களையும் அவர்களுடைய பாதுகாப்பையும் நலவுரித்துக்களையும் அவர்களின் வருங்கால எதிர்பார்ப்புக்களையும் காப்பாற்றுவதாக அமைய வேண்டும். தமிழ்த் தலைவர்கள் என்று கூறுவோர் சிலர் உறுப்பு நாடுகளிடம் சென்று எங்கள் பிரச்சினைகளைக் குறைத்துக் கூறினார்களோ நான் அறியேன்.

இலங்கை பற்றிய நடவடிக்கையானது இன்று ஐ.நா. பேரவையை ஒரு தராசில் தடுமாறிக் கொண்டிருக்க வைத்துள்ளது.



# இந்தியத் துணைத் தூதர் முல்லைத்தீவுக்கு விஜயம்!



யாழ் இந்திய துணைத்தூதுவர் எஸ்.பாலச்சந்திரன் கடந்த வியாழக் கிழமை முல்லைத் தீவு மாவட்ட செயல கத்துக்கு விஜய மொன்றை மேற் கொண்டிருந்தார்.

மாவட்ட செயல கத்தில் வைத்து மேல திக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும் திட்டமிடல் பணிப் பாளர் ஆ.கிருபாசுதன் ஆகியோர் வரவேற்றமையைத் தொடர்ந்து நட்பு ரீதியான கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

மேலும் இந்தச் சந்திப்பின் போது இந்திய அரசாங்கத்தால் வடபகுதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தித் திட் டங்கள் தொடர்பிலும் எதிர்காலத்தில் முன்னேற்றத்தை நோக்கிப் பயணிப்பதற்கு வேண்டிய வழிமுறைகள் தொடர்பிலும் கலந்து ரையாடப்பட்டது.

# இராஜாங்க அமைச்சர் அருந்திக பயணித்த வாகனம் விபத்து!

இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணான்டோ பயணித்த வாகனம் விபத்துக்குள்ளாகி மூவர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆணமடுவ - பங்கதெனிய வீதியின் சேரு கெலே பகுதியில் நேற்றுக் காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது டன் இந்த சந்தர்ப்பத்தில் வாகனத்தில் இராஜாங்க அமைச்சர் இருந்த போதிலும் அவருக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படு கின்றது.

விபத்தில் மோட்டார் வாகன ஓட்டுநர் உட்பட மூவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.



Anna EXPRESS Courier Services
அண்ணா
விரைவும் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
லண்டன் ⇨ 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்
யாழ்ப்பாணம் சங்கானை கல்வியங்காடு ஆவரங்கால் நெல்லியடி
சங்கத்தானை பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு
கனகராயன்குளம் மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park · Npcpark · northernpcpark · Northern PC Park

வெற்றித்தேர்வு வெளியீட்டகம் நடாத்தும்
புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தும்
2021 - தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான
வெற்றித்தேர்வு தொடர் போட்டிப் பரீட்சைகள் ஆரம்பமாகிவிட்டன.
பரீட்சை நாள் – ஞாயிற்றுக்கிழமை
பரீட்சை நிலையம் – நல்லூர் சயன்ஸ் அக்கடமி (முருகன் ஆலயம் முன்பாக)
பரீட்சை நேரங்கள் – காலை 6.00 - 8.15, காலை 8.30 - 10.45, காலை 11.00 - 1.15, மதியம் 1.30 - 3.45, மாலை 4.00 - 6.15
விரும்பிய நேரங்களில் பரீட்சைகள் எழுதலாம்
தரம் 5 மூன்றாவது பரீட்சை 21.02.2021 , தரம் 4 இரண்டாவது பரீட்சை 21.02.2021
பரீட்சைப் பெறுபேறுகள் தரப்படுத்தலுடன் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்படும்.
புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் வெற்றித்தேர்வு வெற்றியாளர்களாக கௌரவிக்கப்படுவர்.
"வெற்றித்தேர்வு வெற்றியாளர்களின் தெரிவு" 0775388471 0773126807

2. 4. 6 மற்றும் 8 சிசிடிவி கமராக்களைக் கொண்ட முழுமையான தொகுப்பு நிறுவலும் உள்ளடக்கப்பட்டுள்ளது!
HIKVISION
2 கமரா தொகுப்பு ~ 45,500
4 கமரா தொகுப்பு ~ 62,500
6 கமரா தொகுப்பு ~ 90,500
8 கமரா தொகுப்பு ~ 1,09,500
2MP Systems
2 YEAR WARRANTY
இத் தொகையில் இங்கு குறிப்பிட்டுள்ள கண்காணிப்பு கருவி தொகுப்பை நிறுவுவதற்கு தேவையான பொருள் தொழிலாளர் கட்டணங்கள் மற்றும் போக்குவரத்து செலவுகள் ஆகியவை அனைத்தும் அடங்கும்!
www.facebook.com/sst.sunsakthy
அழையுங்கள் தொலைபேசியில்
021 221 7994
077 552 7099
SST சன்சக்தி ரேடர்ஸ்



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.02.2021 இல் வெளியிடப்பெற்றது.